ICAR Krishi Vigyan Kendra, CENDECT. Theni
சென்டெக்ட் வேளாண் அறிவியல் மையம், தேனி



# பாரம்பரிய வேளாண் சாகுபடி தொழில்நுட்பங்கள்


பொ. மகேஸ்வரன்

எம். அருண்ராஜ்

சி. சபரிநாதன்

பெ. பச்சைமால்

ஆ. பாஸ்கரன்


https:/atari-hyderabad.org.in/


சென்டெக்ட் வேளாண் அறிவியல் மையம்

காமாட்சிபுரம், தேனி மாவட்டம் - 625 520

வலைதளம்: kvktheni.org.in

# பாரம்பரிய வேளாண் சாகுபடி தொழில்நுட்பங்கள்

பொ. மகேஸ்வரன்
எம். அருண்ராஜ்
சி. சபரிநாதன்
பெ. பச்சைமால்
ஆ. பாஸ்கரன்

**இ.வே.ஆ.க. வேளாண் அறிவியல் மையம், செண்டெக்ட்**
**இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம் – மத்திய அரசு**
**காமாட்சிபுரம், தேனி மாவட்டம் – 625 520, தமிழ்நாடு**
**போன் : 04546– 247564**
**மின்னஞ்சல் :** cendectkvk@rediffmail.com

## நூல் குறிப்பு

முதல் பதிப்பு : 2024

நூல் பெயர் : **பாரம்பரிய வேளாண் சாகுபடி தொழில்நுட்பங்கள்**

நூல் ஆசிரியர்கள் : **முனைவர் பெ. பச்சைமால்**

**திரு. பொ. மகேஸ்வரன்**

**திரு. எம். அருண்ராஜ்**

**திரு. சி. சபரிநாதன்**

மொத்த பக்கங்கள் : 64

வடிவமைப்பு : DS Design, Nagercoil

அச்சு : Agatha Printer, Sivakasi.

விலை : ரூ. 100/-

# அணிந்துரை

தேனி மாவட்டம், சின்னமனூர் வட்டாரம், காமாட்சிபுரத்தில் இயங்கிவருகிறது சென்டெக்ட் வேளாண் அறிவியல் மையம். இந்த மையமானது 1994 ஆம் ஆண்டு சென்டெக்ட் தொண்டு நிறுவனம் மூலம் தொடங்கப்பட்டது. முதலில் மதுரை மாவட்டத்திற்கான வேளாண் அறிவியல் மையமாக செயல்பட்டது. பின்பு மதுரை மாவட்டத்திலிருந்து தேனி மாவட்டம் பிரிக்கப்பட்டு பிறகு தேனி மாவட்டத்திற்கான வேளாண் அறிவியல் மையமாக செயல்படுகிறது. ஆறு நதிகள் பாய்ந்து வளம் கொழிக்கும் தேனிமாவட்டத்தில் பல்வேறுவிதமான பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. கம்பம் பள்ளதாக்கு பகுதியில் நெல், வாழை, தென்னை, திராட்சை மற்றும் காய்கறிகள் அதிகளவு சாகுபடிசெய்யப்பட்டு வருகிறது. வராகநதி பாயும் பெரியகுளம் பகுதிகளில் கரும்பு, வெற்றிலை, மா மற்றும் நெல் போன்றவை முதன்மை பயிராக உள்ளன. சின்னமனூர், உத்தமபாளையம் பகுதிகளில் வாழை மற்றும் காய்கறிகள் பிரதான பயிராக சாகுபடி செய்யப்படுகிறது. ஆண்டிபட்டி வட்டாரத்தில் மல்லிகை பூ மற்றும் மானாவரி பயிர்கள் அதிகளவு சாகுபடி செய்யப்படுகிறது. வைகை தோன்றும் வாலிப்பாறை முதல் கண்டமனூர் வரை முந்திரியும், முருங்கையும் முக்கிய பயிர்களாக உள்ளன. தேனி மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு குறைந்த செலவில் அதிக மகசூல் மற்றும் அதிக வருமானம் பெறக்கூடிய தொழில்நுட்பங்களை வேளாண் அறிவியல் மையங்கள் பல்வேறு செயல்பாடுகள் மூலம் விவசாயிகளுக்கு பரவலாக்கம் செய்யப்படுகிறது. மண் முதல் மார்கெட்டிங் வரை புதிய நுட்பங்களை வேளாண் அறிவியல் மையத்தின் தொழில்நுட்ப வல்லுநர்கள் பண்ணை ஆராய்ச்சி, செயல்விளக்கம், திறன் மேம்பாட்டு பயிற்சி, விழிப்புணர்வு முகாம்கள் மூலமாக விவசாயிகளுக்கு கொண்டு சேர்க்கின்றனர்.

புதிய பயிர் இரகங்களை அறிமுகம் செய்வது ஒருங்கிணைந்த உர மேலாண்மை முறைகள், பயிரை தாக்கும் பூச்சி மற்றும் நோய்களுக்கான சிறந்த தீர்வு, தோட்டக்கலைதுறையில் உள்ள உயர் தொழில்நுட்பங்கள், மதிப்பு கூட்டுதல் மூலம் வருமானத்தை

உருவாக்குவது மற்றும் நவீன தொழில்நுட்பம் மூலம் சாகுபடி மற்றும் சந்தைப்படுத்துதல் குறித்து தேனி மாவட்ட விவசாயிகளுக்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகிறது செனடெக்ட் வேளாண் அறிவியல் மையம்.

பாரம்பரிய சாகுபடி தொழில்நுட்பங்கள் என்பது தற்காலத்தில் மிகமுக்கியமான ஒன்றாகும். அதிகப்படியான ரசாயனங்களை நிலத்தில் பயன்படுத்துவதால் மண்ணின் தன்மைமாறுகிறது. மேலும் விவசாயம் சார்ந்த சுற்றுப்புற சூழல்களையும் கெடுகிறது. விவசாயிகள் இந்த காலத்தில் ஆட்கள் பற்றாக்குறையால் பாரம்பரிய சாகுபடி தொழில்நுட்பங்களை மறந்தே போய்விட்டனர். பாரம்பரிய தொழில்நுட்பங்களை கடைபிடித்து எவ்வாறு மகசூல் பெறுவது என்பதை விவசாயிகள் தற்பொழுது தெரிந்துவைத்துக் கொள்ளவேண்டும். செலவை குறைக்கவும் இயற்கையோடு விவசாயம் பண்ணவும் இந்த பாரம்பரிய தொழில்நுட்பங்கள் மிகவும் முக்கியமானதாகும். அந்த வகையில் செனடெக்ட் வேளாண் அறிவியல் மையத்தின் உழவியல்துறை மூலம் தொகுக்கப்பட்டிருக்கும் இந்த நூல் விவசாயிகளுக்கு பயனுள்ளதாக அமையும் என்று கருதுகிறோம்.

**முனைவர் பெ. பச்சைமால்**

சேர்மன்,

**திரு.பொ. மகேஸ்வரன்**

செனடெக்ட் வேளாண் அறிவியல் மையம்,தேனி

# அறிமுகம்

தேனிமாவட்டம், சின்னமனூர் வட்டாரம், காமாட்சிபுரத்தில் இயங்கிவருகிறது சென்டெக்ட் வேளாண் அறிவியல் மையம். இந்த மையமானது 1994 ஆம் ஆண்டுசென்டெக்ட் தொண்டுநிறுவனம் மூலம் தொடங்கப்பட்டது. முதலில் மதுரை மாவட்டத்திற்கான வேளாண் அறிவியல் மையமாகசெயல்பட்டது. பின்பு மதுரை மாவட்டத்திலிருந்து தேனி மாவட்டம் பிரிக்கப்பட்டு பிறகு தேனி மாவட்டத்திற்கான வேளாண் அறிவியல் மையமாக செயல்படுகிறது. ஆறு நதிகள் பாய்ந்து வளம் கொழிக்கும் தேனி மாவட்டத்தில் பல்வேறுவிதமான பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. கம்பம் பள்ளதாக்கு பகுதியில் நெல், வாழை, தென்னை, திராட்சை மற்றும் காய்கறிகள் அதிகளவு சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. வராகநதி பாயும் பெரியகுளம் பகுதிகளில் கரும்பு, வெற்றிலை, மா மற்றும் நெல் போன்றவை முதன்மை பயிராக உள்ளன. சின்னமனூர், உத்தமபாளையம் பகுதிகளில் வாழை மற்றும் காய்கறிகள் பிரதான பயிராக சாகுபடி செய்யப்படுகிறது. ஆண்டிபட்டி வட்டாரத்தில் மல்லிகை பூ மற்றும் மானாவரி பயிர்கள் அதிகளவு சாகுபடி செய்யப்படுகிறது. வைகை தோன்றும் வாலிப்பாறை முதல் கண்டமனூர் வரை முந்திரியும், முருங்கையும் முக்கிய பயிர்களாக உள்ளன.

தேனி மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு குறைந்த செலவில் அதிக மகசூல் மற்றும் அதிக வருமானம் பெறக்கூடிய தொழில்நுட்பங்களை வேளாண் அறிவியல் மையங்கள் பல்வேறு செயல்பாடுகள் மூலம் விவசாயிகளுக்கு பரவலாக்கம் செய்யப்படுகிறது. மண் முதல் மார்கெட்டிங் வரை புதிய நுட்பங்களை வேளாண் அறிவியல் மையத்தின் தொழில்நுட்ப வல்லுநர்கள் பண்ணை ஆராய்ச்சி, செயல்விளக்கம், திறன் மேம்பாட்டு பயிற்சி, விழிப்புணர்வு முகாம்கள் மூலமாக விவசாயிகளுக்கு கொண்டு சேர்க்கின்றனர்.

புதிய பயிர் இரகங்களை அறிமுகம் செய்வது ஒருங்கிணைந்த உர மேலாண்மை முறைகள், பயிரைதாக்கும் பூச்சி மற்றும் நோய்களுக்கான சிறந்த தீர்வு, தோட்டக்கலை துறையில் உள்ள உயர் தொழில்நுட்பங்கள், மதிப்பு கூட்டுதல் மூலம் வருமானத்தை

உருவாக்குவது மற்றும் நவீன தொழில்நுட்பம் மூலம் சாகுபடி மற்றும் சந்தைப்படுத்துதல் குறித்து தேனி மாவட்ட விவசாயிகளுக்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகிறது செண்டெக்ட் வேளாண் அறிவியல் மையம்.

ஒருங்கிணைந்த பண்ணையம், இயற்கை விவசாயம், மண்வள மேலாண்மை, மண்புழுஉரம் தயாரித்தல், கால்நடைவளர்ப்பு, காளாண் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, இயற்கை இடுபொருட்கள் தயாரித்தல், மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரித்தல், பயிர் கழிவுகளில் இருந்து அலங்கார பொருட்கள் தயாரித்தல், நவீன தோட்டக்கலைதொழில் நுட்பங்கள், பாலி ஹவுஸ், பசுமைகுடில் டிஜிட்டல் முறையில் மார்க்கெட்டிங் செய்தல் போன்ற தலைப்புகளில் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் ஆண்டுதோறும் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

# பட்டங்களும், பயிர்களும்

தேனி மாவட்டத்தில் அனைத்து விதமான பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுவருகிறது. இதற்கு மிக முக்கியமான காரணம் இங்கு இருக்கக்கூடிய சீதோசணநிலையே ஆகும். வேறு எந்த மாவட்டத்திற்கும் கிடைக்காத இயற்கை அமைப்பு தேனி மாவட்டத்திற்கு கிடைத்துள்ளது. நான்கு புறங்களும் மலையால் சூழப்பட்டுள்ள ஒரு மாவட்டம். மாவட்டத்தின் மேற்குபகுதிகள் தென்மேற்கு பருவமழையையும், கிழக்குபகுதிகள் வடகிழக்கு பருவமழையையும் கவசமாக பெறுகிறது. ஆண்டின் அனைத்து பருவங்களிலும் ஏதாவது ஒரு பயிர் சாகுபடி செய்யப்பட்டு கொண்டே இருக்கிறது.

பட்டத்தில் பயிர் செய்வது என்பது மிகவும் முக்கியமானதாகும். பயிர்கள் முளைப்பதற்கும், பூக்கள் உருவாவதற்கும் காலநிலை முக்கியமாக வெப்பநிலை மற்றும் ஈரப்பதம் போன்ற காரணிகள் இன்றியமையாதது ஆகும். ஒருபயிர் அதிகபட்ச மகசூலை கொடுப்பதற்கு சுற்றுப்புற காரணிகள் முக்கியமான காரணமாகும். சிலசமயம் அந்த சுற்றுப்புற காரணிகள் சரியாக இல்லையென்றால் மகசூல் குறைந்துவிடும். பூச்சிகளும் நோய்களும் பருவம் சார்ந்தே பயிர்களை தாக்குகின்றன. மழைகாலத்தில் நோய்களும் கோடைகாலத்தில் பூச்சிகளும் அதிகளவில் பயிர்களை தாக்குகின்றன. சரியானபட்டம் அறிந்து பயிர்களை சாகுபடி செய்தால் உயிர் மற்றும் உயிரற்ற புறகாரணிகளிடம் இருந்துபயிரின் சேதாரத்தை குறைக்கலாம்.

தமிழகத்தில் முக்கியமாக தேனி மாவட்டத்திற்கு உகந்த பருவங்களும் பயிர்களும்

| பட்டம் | பயிர்கள் |
|---|---|
| சித்திரைபட்டம் | நிலக்கடலை, எள், வெங்காயம், கொத்தமல்லி, அகத்தி,கீரை வகைகள், துவரை (நீண்டவயது) |
| வைகாசி பட்டம் | நிலக்கடலை, எள், தக்காளி, வெங்காயம், வெண்டை, கத்திரி, கரும்பு |

| | |
|---|---|
| ஆடிப் பட்டம் | நெல், மக்காச்சோளம், நிலக்கடலை, ஆமணக்கு, தக்காளி, வெங்காயம், வாழை, தென்னை, திராட்சை, மா மற்றும் இதர பழப்பயிர்கள், ஆமணக்கு |
| ஆவணிப் பட்டம் | நெல், மக்காச்சோளம், சோளம், கம்பு, காய்கறிகள், வாழை, தென்னை, உளுந்து, பாசிப்பயறு, துவரை (குறைந்தவயது) |
| புரட்டாசி பட்டம் | கம்பு, சோளம், காய்கறி, உளுந்து, பாசிப்பயறு, சிறுதானியங்கள் |
| கார்த்திகை பட்டம் | பந்தல் காய்கறிகள், நிலக்கடலை, எள், நெல் (நடுத்தரவயது), பீன்ஸ், அவரை, புதிய பழ மரங்கள் (நடவு) |
| மார்கழி பட்டம் | காய்கறிகள், எள், நிலக்கடலை, |
| தைப் பட்டம் | நிலக்கடலை, காய்கறிகள், வாழை, நெல் |
| மாசிப் பட்டம் | எள், சோளம், குறுகியகால காய்கறிகள் |
| பங்குனி | காய்கறிகள் |

மேற்கண்டவை அனைத்தும் விவசாயிகளால் சாகுபடி செய்யப்படும் பட்டங்கள் ஆகும். குறுகியகால காய்கறி பயிர்கள் சந்தை தேவையை அடிப்படையாக கொண்டு சாகுபடி செய்யப்படுகின்றன. அப்போது விவசாயிகள் பட்டம் தவறி சாகுபடிசெய்வதால் இயற்கை சம்பந்தமான இடர்பாடுகள் ஏற்படுகின்றன. ஒரு பயிரில் அதிகபட்ச மகசூல் மற்றும் லாபம் எடுப்பதற்கு சந்தை தேவையும் முக்கியம். அதனடிப்படையில் விவசாயிகள் கடந்த 10-15 வருட சந்தை நிலவரம் மற்றும் காலநிலை நிலவரம் குறித்து அறிந்து வைத்திருந்தால் குறைந்த செலவிலேயே அதிக லாபம் எடுக்க முடியும்.

நெற்பயிருக்கானசிலமுக்கியபருவங்கள்

**நவரை**

| விதைக்கும் மாதம் | கால அளவு (நாட்கள்) | தகுந்த இரகங்கள் | பயிரிடும் இடங்கள் |
|---|---|---|---|
| டிசம்பர்-ஜனவரி | < 120 | குறுகிய கால இரகங்கள் | திருவள்ளூர், வேலூர், , திருவண்ணாமலை, கூடலூர், விழுப்புரம், திருச்சிராப்பள்ளி, நாகப்பட்டினம், மதுரை, தேனி , சேலம், நாமக்கல், திண்டுக்கல், தருமபுரி, கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள். |

**சொர்ணவாரி**

| விதைக்கும் மாதம் | கால அளவு (நாட்கள்) | தகுந்த இரகங்கள் | பயிரிடும் இடங்கள் |
|---|---|---|---|
| ஏப்ரல்-மே | < 120 | குறுகிய கால இரகங்கள் | திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை, கூடலூர், விழுப்புரம், நாமக்கல் மற்றும் தருமபுரி மாவட்டங்கள். |

**கார்**

| விதைக்கும் மாதம் | கால அளவு (நாட்கள்) | தகுந்த இரகங்கள் | பயிரிடும் இடங்கள் |
|---|---|---|---|
| மே- ஜூன் | < 120 | குறுகிய கால இரகங்கள் | திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி, ஈரோடு, கோயம்புத்தூர், மதுரை, தேனி திண்டுக்கல், சேலம், நாமக்கல், மற்றும் தருமபுரி மாவட்டங்கள். |

**குறுவை**

| விதைக்கும் மாதம் | கால அளவு (நாட்கள்) | தகுந்த இரகங்கள் | பயிரிடும் இடங்கள் |
|---|---|---|---|
| ஜூன்-ஜூலை | < 120 | குறுகிய கால இரகங்கள் | திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், கரூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை மற்றும் ஈரோடு மாவட்டங்கள். |

| முன் சம்பா | | | |
|---|---|---|---|
| விதைக்கும் மாதம் | கால அளவு (நாட்கள்) | தகுந்த இரகங்கள் | பயிரிடும் இடங்கள் |
| ஜூலை-ஆகஸ்ட் | 130 - 135 | மத்திய கால மற்றும் நீண்டகால இரகங்கள் | திருவள்ளூர், வேலூர்,, திருவண்ணாமலை, சேலம், நாமக்கல், கூடலூர், விழுப்புரம், மதுரை, தேனி ராமநாதபுரம், தருமபுரி, கோயம்புத்தூர், ஈரோடு, புதுக்கோட்டை மற்றும் நீலகிரி மாவட்டங்கள். |

| சம்பா | | | |
|---|---|---|---|
| விதைக்கும் மாதம் | கால அளவு (நாட்கள்) | தகுந்த இரகங்கள் | பயிரிடும் இடங்கள் |
| ஆகஸ்ட் | 130 – 135 மற்றும் >150 | மத்திய கால மற்றும் நீண்டகால இரகங்கள் | அனைத்து மாவட்டங்களும். |

| பின் சம்பா/தாளடி/ பிசாணம்/பின் பிசாணம் | | | |
|---|---|---|---|
| விதைக்கும் மாதம் | கால அளவு (நாட்கள்) | தகுந்த இரகங்கள் | பயிரிடும் இடங்கள் |
| செப்டம்பர்-அக்டோபர் | 130 – 135 | மத்திய கால மற்றும் நீண்டகால இரகங்கள் | திருவள்ளூர், மதுரை, தேனி கோயம்புத்தூர், ஈரோடு, திண்டுக்கல், கன்னியாகுமரி, திருநெல்வேலி, மற்றும் தூத்துக்குடி மாவட்டங்கள். |

| பின் தாளடி | | | |
|---|---|---|---|
| விதைக்கும் மாதம் | கால அளவு (நாட்கள்) | தகுந்த இரகங்கள் | பயிரிடும் இடங்கள் |
| அக்டோபர்-நவம்பர் | 115 -120 | குறுகிய மற்றும் மத்திய கால இரகங்கள். | தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர் மற்றும் கரூர் மாவட்டங்கள். |


தகவல் - தநாவேப

## மண்ணும் பயிரும்

மண் விவசாயத்தின் உடல். எங்கெல்லாம் நல்ல மண் வளம் உள்ளதோ அங்கெல்லாம் நல்ல விவசாயம் கொழித்து மக்கள் செழிப்புடன் வாழ்வர். விவசாயம் செய்ய பயன்படும் மண் உருவாக பல்வேறு

படிநிலைகள் உள்ளன. பாறைகள் பல்வேறு இயற்கை காரணங்களால் உருமாற்றம் அடைந்து மண்ணாக மாறுகிறது. ஒரு இன்ச் மண் உருவாக கிட்டத்தட்ட 800-1000 வருடங்கள் ஆகிறது. மண்ணின் அமைப்பு விவசாயம் செய்வதற்கு மிகமுக்கியமான காரணியாகும். இந்த மண்ணின் அமைப்பை உருவாக்குவதற்கு மணல், களி, குறுமணல் ஆகிய காரணிகள் மிக முக்கியமானதாகும். இவை எந்தவிகிதத்தில் கலந்துள்ளன என்பதை பொறுத்தே மண்ணின் அமைப்பு உருவாகும். மொத்தமாக 12 விதமான மண் அமைப்புகள் உள்ளன.

**படம் 2.1 மண் அமைப்பு**




மண்ணின் நிறமானது அதில் உள்ள கனிமங்களை பொறுத்து மாறுபடும். செவ்வல் மண் முதல் மஞ்சள் கலந்தஅரக்குநிறமண்ணில் இரும்புசத்து அதிகமாக இருக்கும். நல்ல கருமையாக உள்ள மண்ணில் அங்ககசத்து அதிகமாக இருக்கும். நல்லவெளிர் நிறமாக உள்ள மண் விரைவில் நீரைஉறிஞ்சும் தன்மை கொண்டது.

## மண் பிரிவுகளும் உகந்தபயிர்களும்

**வண்டல் மண் :**

இந்தியாவில் பொதுவாக அதிகமாக காணப்படும் மண் வகை. ஆற்றுப் படுகையில் நீரினால் அடித்து கொண்டுவரப்பட்டு படியவைக்கப்பட்டு உருவாகிறது. இவை டெல்டா என்று அழைக்கப்படுகிறது.

இதில் நெல், பருத்தி, கம்பு, சோளம், துவரை, நிலக்கடலை, மக்காச்சோளம், காய்கறிகள், கரும்பு போன்ற பயிர்களை பயிரிடலாம்.

**செம்மண் :**

தக்காண பீடபூமியில் உள்ள பாறைகள், கிழக்குதொடர்ச்சி மலைகளில் உள்ள பாறைகள் சிதைந்து உருவானதே செம்மண் நிலமாகும். மலைசார்ந்த பகுதிகளில் அதிகம் காணப்படும் மண் வகை செம்மண் ஆகும்.

இதில் நெல் கரும்பு, மக்காச்சோளம், நிலக்கடலை, எள், காய்கறிகள் போன்ற பயிர்களை சாகுபடிசெய்யலாம்.

**இருவண்டல் மண் :**

இது பொதுவானமண் அல்லது கருப்பு பருத்திமண் என்று அழைக்கப்படுகிறது. இவை அதிகளவு ஈரப்பதத்தை தக்கவைத்து கொள்ளும் திறன் கொண்டது. மேலும் அதிகளவு சத்துக்கள் நிறைந்தமண்.

இதில் நெல், கரும்பு, சோளம், சூரியகாந்தி, காய்கறிகள், எள் போன்ற பயிர்களை சாகுபடி செய்யலாம்.

**செம்புறைமண் அல்லது லேட்டரைட் மண் :**

அலுமினியம் ஆக்ஸைடும், இரும்பும் கலந்த மண். இது பெரும்பாலும் மலையை ஒட்டிய பகுதிகளில் அதிகளவு காணப்படுகிறது. அதிக அளவு சிதைவுக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதால் இதில் சத்துக்கள் திறன் குறைவாக இருக்கும். மேற்குதொடர்ச்சி மலை மற்றும்

கிழக்குதொடர்ச்சி மலைப் பகுதிகளில் காணப்படுகிறது. குறைந்த அளவே சத்துக்கள் உள்ளதால் இதில் பெரும்பாலான விவசாய பயிர்கள் சாகுபடி செய்யமுடியாது.

இதில் தென்னை, கொட்டைமுந்திரி, பயறு வகைகள், பருத்தி போன்ற பயிர்களை சாகுபடி செய்யலாம்.

**வன மண் :**

இந்தமண் வகையானது வனப்பகுதிகளில் உருவாகிறது. அதிகளவு அங்கக கரிமம் நிறைந்து காணப்படும். இந்த மண்ணில் அமிலத்தன்மை அதிகமாக இருக்கும்.

இவை தேயிலை, காபி, மிளகு, ஏலம் போன்ற பயிர்கள் சாகுபடி செய்ய உகந்தவை.

**வறண்டமண்**

இந்தமண் வறண்ட மற்றும் பகுதிவறண்ட பகுதிகளில் அதிகளவு காணப்படுகிறது. குறைந்த அளவு அங்கககரிமம் உள்ளதால் சத்துக்கள் திறன் மிகக்குறைவாக இருக்கும்.

இந்தவகையான மண்ணில் தினை, சிறுதானியங்கள் மற்றும் பயறு வகைகளை சாகுபடிசெய்யலாம்.

**உப்பு மற்றும் காரமண்**

நிலத்தடிநீர் உப்புத்தன்மை அல்லது காரத்தன்மையாக இருப்பதால் அந்தமண் உப்பு அல்லது கார மண்ணாக உருவாகிறது. பெரும்பாலும் கடற்கரை பகுதிகள், கடல்நீர் உட்புகும் பகுதிகளில் அதிகமாக காணப்படும். மேலும், மழை குறைவான பகுதிகளிலும் இந்தவகையான மண் அதிகமாக இருக்கும். இவை பெரும்பாலும் சாகுபடி செய்வதற்கு உகந்த மண் இல்லை.

பல்வேறு வகையான மண் அமைப்புகள் உள்ளன. ஒவ்வொரு மண் அமைப்பிற்கும் தனித்தனியான இயற்பியல் மற்றும் வேதியியல் பண்புகள் உள்ளன. அவற்றை முறையாக கண்டறிந்து அதற்கு

ஏற்றாற்போல் சாகுபடிசெய்தால் குறைந்த செலவில் அதிக வருமானம் பெறலாம்.

**தண்ணீரேபயிருக்குமெய்நாடி**

'நீரின்றி அமையாது உலகு' என்ற வள்ளுவரின் வாக்கிற்கு ஏற்ப விவசாயத்திற்கு நீர் இன்றியமையாதது ஆகும். உலகில் எங்கெல்லாம் தண்ணீர் வளம் இருக்கிறதோ அங்கெல்லாம் மக்கள் உணவு பஞ்சமின்றி செல்வ செழிப்புடன் வாழ்வார்கள். நீர்நிலைகள் நிறைந்து இருக்கும் இடத்தில் பலவிதமான பயிர்கள் வளரும். இதனால் அங்கு உணவு உற்பத்தி அதிகமாகி பொருளாதாரமும் உயரும். ஒவ்வொரு பயிருக்கும் ஒவ்வொருவிதமான அளவில் தண்ணீர் தேவைப்படும். சில பயிர்களுக்கு தண்ணீர் அதிகளவிலும், சில பயிர்களுக்கு தண்ணீர் குறைந்த அளவிலும் தேவைப்படும். சிலமுக்கியமான பயிர்களும் அவற்றிற்கு தேவையான தண்ணீர் அளவும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| **பயிர்** | **காலம் (நாட்கள்)** | **தேவைப்படும் தண்ணீர் (மி.மீ)** |
|---|---|---|
| கரும்பு | 110 | 1250 |
| நிலக்கடலை | 360 | 2200 |
| சோளம் | 105 | 500 |
| மக்காச்சோளம் | 100 | 500 |
| ராகி | 95 | 310 |
| பருத்தி | 165 | 600 |
| உளுந்து | 65 | 280 |
| எள் | 85 | 150 |

தகவல் :TNAU – Agri Tech Portal

அதேபோல ஒவ்வொரு பயிருக்கும் குறிப்பிட்ட பயிர் வளர்ச்சி நிலையில் அதி முக்கியமாக தேவைப்படும். அந்த நேரத்தில் கண்டிப்பாக நீர் பாய்ச்சுதல் அவசியம் அல்லது அந்த குறிப்பிட்ட பயிர் வளர்ச்சி நிலை மழைகாலத்தில் வருமாறு விதைப்பு செய்ய வேண்டும். அப்போதுதான் அதிக அளவு மகசூல் கிடைக்கும். அந்த பருவத்தில் நீர் கிடைக்காமலிருந்தாலோ அல்லது குறைந்த அளவு கிடைத்தாலும் மகசூல் இழப்பு ஏற்படும்.

| பயிர் | முக்கியபருவங்கள் |
|---|---|
| நெல் | கதிர் வெளிவரும் பருவம்,பூக்கும் பருவம் |
| சோளம் | பூக்கும் பருவம் |
| மக்காச்சோளம் | பூக்கும் பருவம்,கதிர்விடும் பருவம் |
| கம்பு | கதிர் வெளிவரும் பருவம் |
| உளுந்து, பாசிபயறு, துவரை | பூக்கும் பருவம்,காய் உருவாகும் பருவம் |
| எள் | பூக்கும் பருவம் |
| பருத்தி | பூக்கும் பருவம், காய் உருவாகும் பருவம் |
| மிளகாய் | பூக்கும் பருவம் |
| நிலக்கடலை | பூக்கும் பருவம், காய் உருவாகும் பருவம் |

**பயிருக்கு நீர் தேவையை கணக்கிடும் முறை :**

முன் கூறியது போலவே தண்ணீர் ஒரு பயிருக்கு மிகவும் முக்கியமானது. அதுபோலவே தேவையான நேரத்தில் தண்ணீர் பாய்ச்சுதலும், மகசூல் கொடுப்பதில் முக்கிய காரணியாக இருக்கிறது. தண்ணீர் பற்றாக்குறை நேரங்களில் சரியான நேரத்தில் தண்ணீரை பாய்ச்சினால் மகசூல் அதிகரிக்கும் அதேபோல் தேவையில்லாமல் நீர் விரயமாக்கப்படாது.

**மண் மற்றும் மணல் முறை:**

இந்த முறையில் நிலத்தின் மையத்தில் ஒரு மீட்டர் ஆழம், ஒரு மீட்டர் நீளம், ஒரு மீட்டர் அகலம் என்ற அளவில் குழி தோண்ட வேண்டும். தோண்டப்பட்ட மண்ணில் 5 விழுக்காடு அளவை பிரித்தெடுத்துவிட்டு அதற்கு பதிலாக 5 விழுக்காடு மணலை (ஆற்றுமணல், ஓடைமணல்) சேர்க்க வேண்டும். பிறகு குழியை மேற்கண்ட மண் மணலைகொண்டு நிரப்பிட வேண்டும். பயிர் சாகுபடியின் போது அந்த பகுதியில் வளரும் பயிர் விரைவாக வாட ஆரம்பிக்கும் அதை கணக்கிட்டு நாம் நீரை பாய்ச்சலாம். இந்தமுறை மூலம் குறைந்த எண்ணிக்கையில் நீரைபாய்ச்சி நிறைவானம கசூல் பெறலாம்.

**அதிக பயிர் எண்ணிக்கைமுறை:**

பயிரிடும் நிலத்தில் ஒரு மீட்டர் நீள அகலத்தில் மட்டும் சாதாரண பயிர் எண்ணிக்கை அளவைவிட நான்கு மடங்கு அதிக பயிர் எண்ணிக்கையில் விதைக்க வேண்டும் அல்லது நடவு செய்யவேண்டும். இந்த பகுதியில் உள்ள பயிர்கள் வாடல் குறியீட்டைகாண்பித்து தண்ணீர் தேவையை உணர்த்திவிடும். இதன் மூலம் சரியான நேரத்தில் நீரைபாய்ச்சி மகசூல் பெறலாம்.

**<u>மண்ணின் வளத்தை மேம்படுத்த பசுந்தாள் உரப் பயிர்கள்</u>**

இன்றைய காலத்தில் தீவிர பயிர்சாகுபடி முறை காரணமாக இரசாயன உரங்களின் பயன்பாடு அதிகரித்துள்ளது. இதனால் மண்ணின் இயற்கைதன்மை மாறுபட்டு மண்ணின் வளம் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்துகொண்டே வருகிறது. மண்ணின் பௌதீக இராசயன தன்மைகள் மாறுவதால் நாம் எந்தவகையான உரம் கொடுத்தாலும் அது பயிருக்கு சரியாகபோய் சேராது. (ஆண்டுக்கு ஒரு முறையாவது இந்த பசுந்தாள் உரம் பயிர்களை பயிரிடுவதால் மண்ணின் வளம் அதிகமாகி விளைச்சலும் பெருகும்). இன்றைய சூழ்நிலையில் பயிர் விளைச்சலைப் பெருக்கவும் நிலைப்படுத்தவும், மண் வளத்தினை மேம்பாடு செய்யவும் இயற்கை உரங்களை பயன்படுத்துதல் முக்கியமாக இந்த பசுந்தாள் உரப் பயிர்கள் மிகவும் அவசியமானதாகும். இவை நேரிடையாகவும் மறைமுகமாகவும் மண்வளத்தினை பெருக்கி உற்பத்திதிறனை மேம்படுத்த உதவுகின்றன.

**பசுந்தாள் உரப்பயிர்களின் நன்மைகள்**

- பசுந்தாள் உரங்கள் பயறுவகைக் குடும்பத்தை சார்ந்தவை. இவை காற்றிலிருந்து தழைசத்தினை கிரகித்து சுமார் 20-40 கிலோ கெக்டர் வரை மண்ணில் நிலைநிறுத்தும் தன்மை கொண்டவை.
- மண்ணில் இயற்கையாக உள்ள நன்மை செய்யக்கூடிய நுண்ணுயிரிகள் பெருகுவதற்குஉதவுகின்றன.
- பசுந்தாள் உரங்கள் மட்கும்பொழுதுவெளிவரும் அங்கக அமிலங்கள் மண்ணில் உள்ள மணிச்சத்தினை கரைத்து பயிருக்கு கிடைக்கும் வண்ணம் செய்கிறது.
- மண்ணின் நீர்பிடிப்பு தன்மையை அதிகரிக்கிறது. மேலும் மண்ணின் அமைப்பை மேம்படுத்துகிறது.
- மண்ணில் கீழ் அடிக்கில் உள்ள சத்துக்களை உறிஞ்சி மேற்பரப்பிற்கு கொண்டுவருகிறது. இதனால் அடுத்து சாகுபடி செய்யும் பயிர்கள் பயனடைகின்றன.
- பாஸ்பரஸ் சுண்ணாம்பு, பொட்டாசியம், மெக்னீசியம் மற்றும் இரும்பு போன்ற பயிர்சத்துக்கள் பயிருக்கு எளிதில் கிடைக்க உதவுகிறது.

**பசுந்தாள் உரப்பயிருக்கேற்ற பண்புகள்**

- பசுந்தாள் உரப்பயிரானது வேகமாக வளரும் தன்மையும், மென்மையான தண்டு பகுதியையும் கொண்டிருக்கவேண்டும்.
- வறட்சி, அதிகநீர் மற்றும் வெப்பநிலை மாறுபாடுகளை தாங்கிவளரும் தன்மையை கொண்டிருக்கவேண்டும்.
- பூச்சிநோய்களை தாங்கி வளரும் தன்மையுடையதாக இருக்கவேண்டும்.
- ஆழமான வேர் அமைப்பினை கொண்டதாக இருக்கவேண்டும்.
- விரைவில் வளிமண்டலத்தில் இருக்கும் தழைசத்தினை நிலைநிறுத்தும் தன்மையை கொண்டிருக்கவேண்டும்.

- பயறுவகை பயிராகவும், அதிக வேர்முடிச்சுகளை கொண்டும் இருத்தல் வேண்டும்.

**பசுந்தாள் உரப்பயிர்களின் வகைகள்**

- சணப்பு, செஸ்போனியா, கொளுஞ்சி போன்ற பசுந்தாள் உரப்பயிர்கள் நிலத்தில் விதைக்கப்பட்டு 40-45 நாட்கள் கழித்துபூக்கும் சமயத்தில் உழவுசெய்யப்படவேண்டும்.

- புங்கம், வேம்பு, எருக்கு மற்றும் கிளரிசிடியா போன்ற பயிர்களின் இலைகள் மற்றும் மெல்லிய தண்டுப்பகுதிகள் வேறு இடத்திலிருந்து வெட்டி அறுவடை செய்து நிலத்தில் இடப்பட்டு உழவு செய்யப்பட வேண்டும். இவை பசுந்தாள் இலை உரப்பயிர்கள் எனப்படும்.

**பசுந்தாள் உரப் பயிர்களுக்கான சாகுபடி முறைகள்**

**சித்தகத்தி**

| | | |
|---|---|---|
| பருவம் | : | எல்லாப் பருவங்களிலும் சாகுபடிசெய்யலாம். மார்ச்-ஏப்ரல் மிகசிறந்தபருவமாகும். |
| மண் | : | அனைத்து வகை மண்ணிற்கும் ஏற்றது |
| விதையளவு | : | ஒரு கெக்டேருக்கு 30-40 கிலோ விதை |
| விதைநேர்த்தி | : | ரைசோபியம் நுண்ணுயிர் 5 பாக்கெட்டுகள் நேர்த்தி செய்து விதைக்கவும். பயிர் இடைவெளியானது 40x20 செ.மீ என்ற அளவில் இருக்கவேண்டும். |
| நீர்ப்பாசனம் | : | 15-20 நாட்களுக்கு ஒருமுறை நீர் கட்டுதல் வேண்டும். இதனால் வேர் முடிச்சுகளின் எண்ணிக்கை அதிகமாகும். |

# பாரம்பரிய வேளாண் சாகுபடி தொழில்நுட்பங்கள்

1. **பாரம்பரியபூச்சிக்கொல்லிகள் தயாரிப்புமுறைகள்**

பாரம்பரிய பூச்சி கட்டுப்பாடு தயாரிப்பு முறைகள் விரிவாக இங்கு விளக்கப்படுகிறது. இலை, இலைசாறு போன்ற பல்வேறு வடிவங்களில் தயாரிக்கப்படுகிறது.

**பூச்சிவிரட்டிகள்**

**இலைகதம்பசாறு**

குறிப்பிட்ட தாவரத்திலிருந்து இலைகளை சேகரித்து எடுத்து, நன்கு நீரில் கழுவிசுத்தம் செய்து அவற்றை நன்கு அரைத்து, அதன் சமபகுதி ஏற்ப நீரில் அல்லது மாட்டு சிறுநீரில் கரைத்து ஒருநாள் இரவு முழுவதும் எந்தவித இடையூறுமின்றி ஊறவிடவேண்டும். இந்த கலவை காலையில் ஒரு மூடப்பட்ட கொள்கலனில் 70º - 80º செ வெப்பநிலையில்,½ - 1 மணி நேரம் கொதிக்கவைப்பதால் நல்ல விளைவை ஏற்படுத்தும். கொதிக்கவைக்கப்பட்ட கலவையை 12 மணி நேரம் குளிரவைத்து, குளிரவைக்கப்பட்ட கலவையை ஒரு நல்ல காடா துணி மூலம் வடிகட்டி நல்ல பாட்டிலில் 15 நாட்களை வரை சேமிக்கலாம். இந்த கலவை பரிந்துரைக்கப்பட்ட அளவு நீரில் கலந்து பயிருக்கு பயன்படுத்தலாம்.

**வேப்ப இலைசாறு**

5 கிலோவேப்ப இலையை நன்றாக அரைத்து 6 லிட்டர் தண்ணீரில் கலக்க வேண்டும். இக்கலவையை காலையில் நன்கு கொதிக்கவைத்து, அக்கலவையுடன் 150 கிராம் சோப்பு தூள் சோத்து, மற்றும் 60 லிட்டர் தண்ணீருடன் கலந்து தெளிக்கவேண்டும்.

**புங்கை இலைசாறு**

கர்நாடக விவசாயிகள் நதி பக்கங்களிலும், சாலை பக்கங்களிலும் மற்றும் காடுகயிலும் மற்றும் நடவுக்குமுன் தண்ணீர் தேங்கிநிற்கும் வயல்களிலும் இருக்கும் புங்கை இலையை சேகரித்து, இந்த இலைகளை நன்றாக மண்ணில் 2 அல்லது 3 நாட்கள் முற்றிலும் மட்கிய பிறகு சேற்றுழவு செய்கின்றனர்.

**ஐப்போமியா இலைசாறு**

5 கிலோ ஐப்போமியா இலைகளை குளத்திலிருந்து வெட்டி எடுத்து, அவற்றிலிருந்துகழிவுகள் மற்றும் உலர்ந்த தண்டு போன்றவற்றை நீக்கிவிட வேண்டும். அவற்றை நன்கு அரைக்கவேண்டும். அவற்றை அதனுடன் சமஅளவில் நீர் சேர்த்து நன்கு கொதிக்கவைக்க வேண்டும். அதன் பிறகு இக்கொதிக்கும் கலவையுடன் சிறிது மாட்டு சிறுநீர் கலக்கவேண்டும்.

அக்கலவை அளவு நான்கில் ஒரு பகுதி என்றளவுக்கு வரும் போது அவற்றை சூடுபடுத்துவதிலிருந்து எடுத்து ஒரு இரவு முழுவதும் குளிர்விக்க வேண்டும்.

காலையில் இக்கலவையுடன் மீண்டும் மாட்டுசிறுநீருடன் கலந்து 4.5 லிட்டர் அளவுக்கு கொண்டுவரவேண்டும், இவற்றுடன் 250 கிராம் சோப்புத் தூளை 500 மிலி தண்ணீருடன் கலக்கவேண்டும். இச்சோப்பு கலவையை இந்தச் சாறுடன் கலந்து 500 மிலி அளவுக்கு எடுத்துஅதை 10 லிட்டர் தண்ணீருடன் கலந்து ஒரு ஏக்கருக்கு தெளிக்கலாம்.

**நொச்சி இலைசாறு**

இது பொதுவாக சாலைஓரங்களில் கிடைக்கக்கூடியது. இவற்றில் நல்ல இலைகளை பறித்து, சுத்தம் செய்து நன்கு அரைக்கவேண்டும். இவற்றை நல்ல சுத்தமான, வடிகட்டிய 3லி மாட்டுசிறுநீருடன் ஒரு இரவு முழுவதும் ஊறவைக்க வேண்டும். மறு நாள் காலையில் இந்த ஊறியகலவையை நன்றாக கலக்கி 70-80º செ வெப்பநிலையில் 3-4 மணி நேரம் கொதிக்கவைக்க வேண்டும். இக்கலவையை மிகவும் அடர் திரவமாக இருந்தால் அவற்றுடன் காய்ச்சி வடிகட்டிய சுத்தமான தண்ணீரை சேர்த்து ஒரு காடாதுணியால் வடிகட்டி அவற்றை ஒரு நாள் இரவு முழுவதும் குளிர்விக்க வேண்டும். 150 கிராம் அளவு சோப்புத்தூளை 250 மிலி தண்ணீருடன் கலந்து இக்கலவையுடன் சேர்க்கவேண்டும். இந்த இறுதி கலவையில் 50 மிலி கலவையுடன் 1லி தண்ணீர் கலந்து தெளிக்கலாம்.

**எருக்கு இலைசாறு**

1கிலோ எருக்கு இலையை அவற்றின் பாலுடன் சேகரித்து, அவற்றை நன்குசுத்தம் செய்து, அவற்றை நறுக்கி நன்றாக அரைத்துக் கொள்ளவேண்டும். இக்கலவையை 50 லிட்டர் நீருடன் கலந்து வடிகட்டி தெளிக்கலாம்.

**இலைசாறு**

டினோஸ்போரா இலையை நறுக்கி அவற்றை நன்கு தண்ணீர் சேர்த்து விழுதாக அரைத்துக் கொள்ள வேண்டும். இக்கலவையையில் நெல் நாற்றுகளை ஒருநாள் இரவுமுழுக்க ஊறவைத்து பின் நடவுசெய்ய வேண்டும். 10-15 கிலோநறுக்கிய இலைகள், ஒருகெக்டேருக்கு தேவையான நாற்றுகளை நேர்த்திசெய்ய தேவைப்படும். இந்த முறை நெல்லில் பச்சைத்தத்துப் பூச்சி எதிராக பயனுள்ளதாக அமையும். இக்கொடிகள் 30 செ.மீ. நீளமானது துண்டுகளாக வெட்டி அல்லது இரு மூங்கில் முனைகளிலும் கட்டி நிலத்தில் வைக்கவேண்டும். சிலசமயங்களில் சிறிய துண்டுகளை வலை அமைப்புடைய பையில் வைக்கவேண்டும். இந்த பையை வயலின் தண்ணீர் உள்ள இடத்தில் வைக்கவேண்டும். எனினும் இந்த துண்டுகள் தானியம் உருவாவதற்குமுன் அகற்றப்படவேண்டும்.

**காட்டாமணக்குதாவர இலைசாறு**

சுத்தமான காட்டாமணக்கு தாவர இலை மற்றும் தண்டை சுத்தமான நீருடன் நன்கு அரைக்க வேண்டும், இந்த எண்ணெய் பசையுடன் கூடிய 5 கிலோ காட்டாமணக்கு சாறு கலவையை 5லி மாட்டு சிறுநீருடன் ஒரு நாள் இரவு முழுவதும் வைக்கவேண்டும் மற்றும் 3-4 மணி நேரம் 2லிட்டர் தண்ணீர் சேர்த்து கொதிக்க வைக்கவேண்டும். இந்த கலவையை 5 லிட்டர் அடர் கலவையாகும் போது அவற்றை ஒரு காடாதுணியின் மூலம் வடிகட்டி தெளிக்கவேண்டும்.

**புகையிலைகழிவுசாறு**

புகையிலை கழிவுகளை புகையிலை அறுவடைக்கு பின் வயல் அல்லது பண்ணையிலிருந்து (5 கிலோ) சேகரித்து, அவற்றை துண்டுகளாக நறுக்கி 5லி மாட்டு சிறுநீரில் 7 நாட்கள் வை ரஊறவைக்க வேண்டும். இக்கலவையுடன் 150 கிராம் சோப்புத்தூளுடன் தண்ணீர் சேர்த்து இக்கலவையில் சோக்கவேண்டும். இக்கலவையில் 50மிலி எடுத்து அவற்றுடன் 1 லிட்டர் தண்ணீர் கலந்து தெளிக்கவேண்டும்.

**கற்றாழைசாறு**

சாலை ஓரங்களில் வளர்ந்திருக்கும் கற்றாழைவெட்டி,சுத்தம் செய்து, துண்டுகளாக நறுக்கி அவற்றை நன்றாக அரைக்க வேண்டும். இவற்றை நல்லசுத்தமான தண்ணீருடன் கலந்து 24 மணி நேரம் ஊறவைத்து நன்கு கலக்கி மஸ்லின் துணிகொண்டு வடிகட்டவேண்டும்.

இந்தகலவை 100 மி.லிட்டருடன் 500 மி.லி மாட்டுசிறுநீர் மற்றும் 10 கிராம் சோப்பு தண்ணீரை கலந்து தெளிக்கவேண்டும்.

**பூண்டுகிராம்புசாறு**

சுத்தமான பூண்டை துண்டுகளாக வெட்டி அவற்றை நன்கு அரைத்து அவற்றை அதன் சமஅளவு மண்ணெய்யில் ஒருநாள் இரவு முழுவதும் ஊறவைக்க வேண்டும். இச்சாற்றை நன்றாக கலக்கி காடாதுணியில் வடிகட்டவேண்டும். இச்சாற்றுடன் 150 கிராம் சோப்தூளை கலந்து ஒருசுத்தமான பாட்டிலில் சேமித்துவைக்கலாம்.

**பச்சைமிளகாய் மற்றும் பூண்டுசாறு**

பச்சைமிளகாயை காய்ச்சி வடிகட்டியநீரில் சுத்தம் செய்து, அவற்றை நன்றாக அரைத்து, அதனுடன் 10 லிட்டர் தண்ணீர் சேர்த்து அவற்றை 70-80º செ வெப்பநிலையில் அக்கலவைபாதியாகும் வரை கொதிக்க வைக்க வேண்டும˙.சுத்தமான பூண்டு கிராம்பை நன்றாக துண்டுகளாக நறுக்கி, அவற்றை நன்றாக அரைத்து அதன் சமஅளவுக்கு மண்ணெய் கலந்து 12-14 மணி நேரம் ஊறவைக்கவேண்டும். பின்னர் இவற்றை காடாதுணிமூலம் வடிகட்ட வேண்டும். 150கிராம் சோப்புதூளுடன் 250 மிலி தண்ணீர் கலந்து இந்தகலவையுடன் கலக்கவேண்டும். இக்கலவையில் 20 மிலி எடுத்து அதனுடன் 1 லிட்டர் தண்ணீர் கலந்து தெளிக்கவேண்டும்.

**வேப்பங் கொட்டைச் சாறு**

வேப்பங் கொட்டைகளை சேகரித்து, சுத்தமான நீரில் சுத்தம் செய்து நிழலில் சிலநாட்கள் உலரவைக்க வேண்டும். இக்கொட்டையின் வெளிதோல் உடைத்து மற்றும் கொட்டையின் உள் பகுதியை சேகரித்து நன்கு அரைத்து பசைபோல் தயாரித்து அவற்றுடன் 200 லிட்டர் நீருடன் 150 மிலி சோப்புகலவையுடன் கலந்து ஒருநாள் இரவுமுழுவதும் இடையூறுயின்றி வைக்கவேண்டும், மறுநாள் காலையில் இதை வடிகட்டி தெளிக்கவேண்டும்.

வேப்பங் கொட்டை பசையுடன் 5 லிட்டர் நீர் அல்லது மாட்டு சிறுநீருடன் கலந்து ஒருநாள் இரவுமுழுவதும் இடையூறுயின்றி வைத்துவிடவேண்டும். இந்த ஊறிய கலவையை 2-3 மணி நேரம் 70-80º செ வெப்பநிலையில் கொதிக்க வைக்கவேண்டும். இந்த கலவை அடர் நிறத்திற்கு மாறியவுடன் அவற்றை குளிர்விக்க வேண்டும். பிறகு இந்த சாற்றை ஒரு சுத்தமான பாட்டிலில் சேமித்து வைக்கலாம்.

வேப்பங்கொட்டையை மண்ணெய்யில் ஒருநாள் இரவுமுழுவதும் ஊறவைக்க வேண்டும். அடுத்த நாள் காலையில் இந்த சாற்றை வடிகட்டி அவற்றுடன் தேவையான அளவுநீர் சேர்த்துதெளிக்கலாம்.

**மலைவேம்புகொட்டைநீர்மக் கரைசல்**

மலைவேம்பு கொட்டையை நீரில் ஊறவைத்து பின்னர் அரைமணி நேரம் கொதிக்கவைத்து 24 மணி நேரம் இடையூறுயின்றி வைக்க வேண்டும். 1லிட்டர் மாட்டுச் சிறுநீருடன் 150 கிசோப்பு தூள் சேர்த்துகலக்கி அவற்றை வடிகட்டவேண்டும். பின் இந்த கலவையை மலைவேம்பு கொட்டை நீர்மக் கரைசலுடன் கலந்து எதிர்கால பயன்பாட்டிற்காக சேமித்து வைக்கவேண்டும்.

**அரளிவிதைசாறு**

அரளி விதைகளை சேகரித்து, சில நாட்கள் நிழலில் உலரவைத்து, அதை தூள் செய்து, இத்தூளை சலித்து நீருடன் கலந்து ஒருநாள் இரவு முழுவதும் இடையூறுயின்றி ஊறவைத்து, பின் காடாதுணியில் வடிகட்டி தெளிக்கவேண்டும்.

**வேம்புஎண்ணெய் தெளிப்பு**

வேபம்பு எண்ணெய் (3 லி) 200 மிலி சோப்பு கரைசலுடன் கலந்து ஒரு ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீருடன் கலந்து தெளிக்கவேண்டும்.

**இலுப்பஎண்ணெய் தெளிப்பு**

30மிலி இலுப்ப எண்ணெய்யுடன் 5 கிராம் சோப்புகலந்து இதனுடன் 1 லிட்டர் தண்ணீர் சேர்த்துதெளிக்கவேண்டும்.

**மீன் எண்ணெய் சோப்புகரைசல்**

1 லிட்டர் மீன் எண்ணெய் சோப்புகரைசலுடன் நீர் மற்றும் புகையிலை சாறு மற்றும் சோப்பு கலக்க வேண்டும். இவற்றை காலை வேளையில் தெளிக்கவேண்டும்.

**மாட்டுசாணம் சாறு**

பசுமையான மாட்டுசாணம் 100 கிராம் சேகரித்து 100 மிலி நீரில் கரைத்து ஒருகாடா துணியில் வடிகட்டி தெளிக்கவேண்டும்.

**வேப்ப இலை தூள்**

பசுமையான வேப்ப இலைகளை சேகரித்து, நன்றாக தூசி மற்றும் அழுக்கைசுத்தம் செய்து, நிழலில் 15 நாட்கள் உலர

வைக்கவேண்டும். பிறகு உலர்த்தப்பட்ட இலைகளை பொடிசெய்து விதைநேர்த்திக்கு பயன்படுத்தலாம்.

**ஆடாதொடா இலைகழிவு**

ஆடாதொடா இலைகளை சேகரித்து அதிலிருந்து தூசி மற்றும் அழுக்கை சுத்தம் செய்து நிழலில் உலரவைத்து தூள் செய்து சேமித்து வைத்து எதிர்கால தேவைக்கு பயன்படுத்தலாம்.

**நொச்சி இலைகழிவு**

நொச்சி இலைகளை சேகரித்து, நிழலில் 15 நாட்கள் உலரவைத்து, நன்றாக தூள் செய்து பயன்படுத்தலாம்.

**புகையிலை இலைகழிவு**

புகையிலைகளை சேகரித்து, நிழலில் உலரவைத்து, நன்றாக தூள் செய்து பயன்படுத்தலாம்.

**ஐப்போமியா இலைகழிவு**

ஐப்போமியா இலைகளை பயன்படுத்தாத நிலம், பாசன கால்வாயிலிருந்து சேகரித்து, 15 நாட்கள் உலரவைத்து, பிறகு நன்றாக தூள் செய்து பிறகு பயன்படுத்தலாம்.

**வேம்புமற்றும் ஊமத்தை இலை தூள்**

சுத்தமான, வேம்பு மற்றும் ஊமத்தை இலைகள் சேகரித்து நிழலில் உலரவைக்க வேண்டும். ஒரு வாரத்திற்கு பிறகு உலரவைக்கப்பட்ட இலைகளை தூள் செய்து சேமித்து எதிர்கால தேவைக்கு பயன்படுத்தலாம். வேம்பு மற்றும் ஊமத்தை இலைகளை சரிசம அளவு சேர்க்க வேண்டும்.

**வேப்பங் கொட்டை தூள்**

வேப்பம் பழங்களை சேகரித்து, அவற்றின் தசைமற்றும் தோல் நீக்கி, ஒருவாரம் நிழலில் உலரவைக்க வேண்டும். ஒருவாரத்திற்கு பிறகு, கொட்டையின் விதையுறை நீக்கி பின் அவற்றை நன்றாக பொடி செய்ய வேண்டும். கண்ணாடி ஜாடியில் இவற்றை சேமித்து எதிர்கால பயன்பாட்டிற்கு பயன்படுத்தலாம்.

**மஞ்சள் தூள்**

உள்ளூர் சந்தையில் சேகரிக்கப்பட்ட மஞ்சள் கிழங்கை சேகரித்து தூள் செய்து கண்ணாடி பாட்டில்களில் சேமித்துவைக்க வேண்டும்.

**வசம்புகிழங்கு தூள்**

வசம்புகிழங்கை உள்ளூர் சந்தையிலிருந்து சேகரித்து, அவற்றின் தோல்களை நீக்கி நன்றாக தூள் செய்து பயன்படுத்தலாம்.

**நெல் தவிடுமற்றும் மண்ணெண்ணெய் கலவை**

அரிசி ஆலைகளிலிருந்து நெல் தவிடுகளை சேகரித்து அவற்றை 2 லிட்டர் மண்ணெண்ணெய்யில் கலந்துவைக்க வேண்டும்.

**சைகஸ் கோன் துண்டுகள்**

சைகஸ் கோன் துண்டுகள் தமிழ்நாட்டின் மேற்கத்திய தொடரான திருநெல்வேலி மாவட்ட புலியாரு பகுதியிலும், கேரள மாவட்டத்தின் ஆரியங்காவு பகுதியிலும் கிடைக்கும். இதில் ஆண் சைகஸ் கோன் துண்டுகள் முதிர்ச்சியடைந்து, நறுமணம் அளிக்கும், இவை பூச்சிக்கொல்லியாக பயன்படுத்தப்படுகிறது. இந்த கோன்களை சிறு சிறு துண்டுகளாக வெட்டி ஈரப்பதம் இருக்கும் நெல் வைக்கோலுடன் வைக்கவேண்டும். இந்த துண்டுகளை செடிகள் முழுக்க படரும்படி வைக்கவேண்டும். இந்த நெல் வைக்கோலை தொடர்ந்து ஈரப்பதமாக வைத்திருப்பதால் இதிலிருந்து தொடர்ந்து நறுமணம் வீசிகொண்டிருக்கும்.

**மரபட்டைதுண்டுகள்**

லவங்கப்பட்டை, சிலானிக்கம் மற்றும் யூக்கலிப்டஸ் போன்ற பல்வேறு மரப்பட்டை துண்டுகளை 1:4 என்ற விகிதத்தில் கலந்து நெல் விதைபைகளில் வைக்கவேண்டும். இந்த மரப்பட்டைகளை தேவையான அளவிற்கு உடைத்து பயன்படுத்த வேண்டும்.

**சாம்பல்**

மரங்கள் மற்றும் இலைகள் இவை எரிந்த பிறகு கிடைக்கும் சாம்பலை நன்றாக தூள் செய்து பயன்படுத்தவேண்டும்.

**மரப்பட்டைசாம்பல்**

மரப்பட்டை சாம்பலை சேகரித்து அதை பயன்படுத்த வேண்டும்.

**மரசாம்பல்**

மரத் துண்டு எரிந்து மீதமாகும் இந்த சாம்பலை சலித்து சுத்தம் செய்து சேகரித்து வைக்கவேண்டும். இந்த சுத்தம் செய்த சாம்பலை சுத்தமான பாட்டிலில் எதிர்கால தேவைக்காக சேகரித்து வைக்கவேண்டும்.

**பழுப்புநிலக்கரிசாம்பல்**

பழுப்பு நிலக்கரி சாம்பலை நெய்வேலி பழுப்புநிலக்கரி கார்ப்ப ரேனிலிருந்து சேகரித்து நன்றாக தூள் செய்து கொள்ளவேண்டும். இதை கண்ணாடி பாட்டிலில் சேமித்து எதிர்கால பயன்பாட்டிற்கு பயன்படுத்தலாம்.

**மணல்**

ஆற்று மணலை சலித்து சேகரித்து விதை நேர்த்திக்காக பயன்படுத்தலாம்.

**துமாஸ் இலைகள் (Combretum ovali folium Spreng)**

துமாஸ் இலைகளை, பண்ணைபுதர்கள், தரிசு நிலங்களிலிருந்து சேகரித்து கொள்ளவேண்டும். 5-7 நபர்கள் ஒருவரிசையாக நின்றுகொண்டு தங்கள் முதுகில் ஒரு பையில் இந்த இலைகளை வைத்துக் கொள்ளவேண்டும். இவர்கள் ஒரு புறத்திலிருந்து மற்ற பக்கத்திற்கு காற்று வீசும் திசையில் இடம் பெயரவேண்டும். அதே வழியில் காற்றில் பறக்கும் 1-2 பூச்சிகளை பிடித்து 2-3 இலைகளுடன் கையில் வைத்து நசுக்கவேண்டும். விசித்திர மணம் இந்த இலை மற்றும் பூச்சி கலவையிலிருந்து வரும். இவ்வாறு செய்யும் போது, பூச்சிகள் மணம் வீசும் திசையைவிட்டு காற்றுவீசும் திசைக்குசெல்லும். அனைத்து பூச்சிகளும் விரைவில் ஒருதிசைக்கு செல்லும் வரை புதியதாக பூச்சிகளும் இலைகளையும் நசுக்கிகொண்டே இருக்கவேண்டும்.

**எருக்குதண்டு**

விவசாயிகள் எருக்கு தண்டை எடுத்து அதன் இலைகளை நீக்கிவிட்டு பின்னர் அவற்றை செங்குத்தாக இரண்டு பகுதிகளாக வெட்டி (10 -15 செ.மீநீளம்) துண்டுகளாக்க வேண்டும். இந்த துண்டுகளை நிலம் முழுவதும் வரப்பு ஓரம் 2-3 மீ இடைவெளியில் பரப்பவேண்டும். இத்தண்டின் மேற்புரம் பாம்பின் தோல் போன்று தோற்றமளிப்பதால் எலிகள் பயந்து ஓடிவிடும்.

**க்ளைரிசிடியாஎலிகொல்லி**

க்ளைரிசிடியா செப்பியம், ஒரு வேகமாக வளரும் எலி கொல்லிமரம். விவசாயிகள் இதன் பட்டைமற்றும் இலைகளை, ஈரமான கோதுமை அல்லது வாழைதுண்டுகளை கொண்டு இதை அரைக்கப் பயன்படுத்துவர். தானியகலவைகள் மற்றும் க்ளைரிசிடியா இலைகளை

ஒன்றாக தரையில் வைத்து அவை நொதிக்கவிட வேண்டும். இந்த நொதித்த திரவம் எலிகளை ஈர்க்கும். நெருஞ்சில் முள்ளைவளைத்து கட்டி அதன் நடுவில் எலிக்கான உணவை வைக்கும்பொழுது எலி அதை எடுக்கவரும் அவ்வாறு வந்த எலியால் முள்ளைவிட்டு வெளியேபோக முடியாது.

**மஞ்சள் தூள் கலந்துசமைத்தஅரிசி**

மஞ்சள் தூள் கலந்து வேகவைத்த அரிசி மஞ்சள் நிறத்திலிருக்கும், இந்த மஞ்சள் நிறசாதத்தை வயல் முழுக்க வைக்கும்போது இந்த நிறம் புழுக்கள், கொக்கி புழுக்கள் மற்றும் பறவைகளை ஈர்க்கும். இவ்வாறு ஒரே இடத்தில் இருக்கும் புழுக்களை இப்பறவைகள் சாப்பிடும். ஒரு ஏக்கருக்கு தோராயமாக ஒரு கிலோ அரிசி தேவைப்படும். இந்த மஞ்சள் நிறசாப்பாட்டை 5 மீட்டர் இடைவெளியில் அதிகாலை அல்லது மாலையில் வைப்பதால் அதிக எண்ணிக்கையிலான புழுக்கள் வெளிவரும். இதை 2-3 நாட்கள் தொடர்ந்து செய்யவேண்டும். முதல் நாள் புழுக்கள் ஈர்க்கப்படும், ஆனால் இரண்டாவது நாள் அதிக எண்ணிக்கையிலான பறவைகளால் ஈர்க்கப்பட்டு புழுக்கள் கொல்லப்படும். இந்தஉணவை ஒரு மெல்லிய வாழை இலையில் வைக்கவேண்டும், பறவைகள் இந்த உணவைஎடுக்க முயற்சிக்கும் போது, எதிர்பாராதவிதமாக உணவுகீழே சிந்தப்படும். இவ்வாறு கீழேசிந்திய உணவை பறவைகள் எடுக்கமுயற்சிக்கும் போது புழுக்களைபார்க்கும், அவற்றை உண்ணும். சிலவிவசாயிகள் பறவைகளை ஈர்ப்பதற்காக பாலில் வெந்த அரிசியை பயன்படுத்துகின்றனர். இதுவும் புழுக்களுக்கு எதிரான நடவடிக்கையாகும். இந்த முறையை ஆந்திரபிரதேசம் மற்றும் தமிழ்நாட்டில் மதுரைமாவட்டத்தில் பின்பற்றுகின்றனர்.

**சேமித்தல்:**

தானியங்களை சேமிக்கும்போது அதனுடன் கொண்டைகடலையின் தோலைகொண்டு சேமிக்கவேண்டும் இத்தோலில் இயற்கையாகவே உப்புத் தன்மையிருப்பதால் பூச்சிகளைதவிர்க்கலாம். இம்முறையை ஆந்திரபிரதேசத்தில் கடைபிடிக்கின்றனர்.

கோதுமை மற்றும் பல பயிர்களை விளக்கெண்ணெய் கொண்டு பாதுகாக்கின்றனர். இது நீண்டகாலம் வரையில் பாதுகாக்கலாம்.

விதைகளை ஒரு கொள்கலன் மற்றும் துணி அல்லது காகித துண்டில் எடுத்து அதனுடன் வேப்ப இலை, புங்கன் இலை, நொச்சி இலை அவற்றை 3"மற்றும் மணல் 6"ஆழத்தில் வைக்கவேண்டும்.

# சில முக்கிய பயிர்களுக்கான பாரம்பரிய சாகுபடி தொழில்நுட்பங்கள்

**நெல்**

- நெல் விதைகளை 12 மணி சாண எரிவாயு கலன் கழிவுகளில் நேர்த்தி செய்தால், நாற்றுக்களை பூச்சி மற்றும் நோய் தாக்குதலுக்கு எதிர்ப்பு உண்டாக்கும்.
- கதிர் விடும் சமயத்தில் நெல் வயலில் ‘சைகஸ் சிர்சினாலிஸ்’செடிமண் பூக்களைஏக்கர் 4 இடங்களில் வைத்தால்,அதிலிருந்துவரும் வாடை,கதிர் நாவாய் பூச்சியைவிரட்டும்.
- 30 கிலோ புளி விதையை ஒரு ஏக்கருக்கு நடவு நட்ட ஒரு நாள் பின்பு இட்டால் பயிர் வளர்ச்சியும் மகசூலும் அதிகரிக்கும்.
- நீர்த்த கோமியத்தில் நெல் விதைகளை ஊறவைத்து பின் விதைத்தால் இலைப்புள்ளி மற்றும் குலை நோய் தாக்குதல் குறையும்.
- நெல் விதைகளை பாலில் ஊறவைத்து விதைத்தால் நெல் துங்ரோ மற்றும் நெல் குட்டை நோய் தாக்குதலுக்கு எதிர்ப்புசக்தி அதிகரிக்கும்.
- நெல் விதைகளை புதினா இலைச்சாற்றில் 24 மணி நேரம் ஊறவைத்து விதைத்தால் சிவப்பு இலைப்புள்ளி நோய் கட்டுப்படுத்தும்.
- ‘T’ வடிவ மூங்கில் கழிகளைநெல் வயலில் பல இடங்களில் வைத்தால், பறவைகள் உட்கார்ந்து, நெல்லில்தாக்கும் பூச்சிகளின் புழு மற்றும் பூச்சிகளை உண்ணும்.
- ஆடிப் பெருக்கு அன்று விதை விதைத்தால் நல்லமகசூல் கிடைக்கும்.
- நடவு வயலை 4 முதல் 6 தடவை உழவுச் செய்தால் நல்ல மகசூல் கிடைக்கும்.
- ஆவணி மாதத்தில் (ஆகஸ்ட் - செப்டம்பர்) நடவு செய்தால் அதிகமகசூல் கிடைக்கும்.

- அக்டோபர் - நவம்பர் மாதத்தில் நடவு செய்தால் - மகசூல் குறையும்.
- காற்று திசையில் நடவுசெய்தால்,பயிர் நன்றாக செழிப்புடன் வளரும்.
- சம்பா நடவு நெருங்கிநடு, நாவரைநடவு தள்ளிநடு.
- ஆட்டுக்கிடை கோடையில் பொடு, அதிகமகசூல் பெறு.
- ஆட்டுக்கிடை முதல் பருவம், பசுந்தாள் உரம் இரண்டாம் பருவம் இட அதிகமகசூல் கிடைக்கும்.
- 100 கிலோ ஏக்கர் பன்றி எரு இட்டால் 10 நாள் நடவுகழித்து இட்டால் அதிக மகசூல் பெறும்.
- வேப்பம் புண்ணாக்குக்குப் பதில் வேப்பங்கொட்டை தூளை ஏக்கருக்கு இட்டால் நல்லமகசூல் பெறலாம்.
- களைகளைக் கட்டுப்படுத்த, விதைப்பிற்கு முன்போ அல்லது நடவுக்கு முன்போ, நீர்கட்டிகளைகள் எல்லாம் முளைத்து வந்தவுடன், உழவுசெய்து, மண்ணில் மட்கச் செய்யவேண்டும்.
- கோரைப்புல்லைக் கட்டுப்படுத்த, தக்கைப்பூண்டு செடியை பயிரிடலாம்.
- நாற்றாங்காலில், இலைப்பேனை கட்டுப்படுத்த எருக்களை செடியை பசுந்தழை உரமாக இடவேண்டும்.
- நெல்லில் இலைப்பேனை கட்டுப்படுத்த, வேப்பம் புண்ணாக்கு சாற்றை தெளிக்கவேண்டும்.
- இலைமடக்குப் புழுதாக்கிய வயலில், நாட்டு இலந்தை அல்லது அயிலை தாவர கிளையை புதைக்க வேண்டும்.
- நெல்லில் தண்டுத்துளைப்பானைக் கட்டுப்படுத்த, நீருடன் வேப்பெண்ணெய் 30 மிலி.லி என்ற விகிதத்தில் கலந்து தெளிக்கலாம்.
- தண்டுதுளைப்பான் மற்றும் கதிர் காவாய் பூச்சியை கட்டுப்படுத்த செங்கல்சூளை சாம்பலை காலை வேளையில் இடலாம்.
- கதிர் நாவாய் பூச்சியைகட்டுப்படுத்த, 10 கிலோ பசுமாட்டுசாணி சாம்பலுடன் 2கிலோ சுண்ணாம்பு தூள் மற்றும் 1 கிலோ

புகையிலை கழிவைகலந்து காலைவேளையில் பயிர் மீது தூவவேண்டும்.

- கதிர் நாவாய் பூச்சியின் சேதாரத்தை கட்டுப்படுத்த, 100 மிலி கருவேல் இலைசாற்றுடன் 10 கிலோ சாணியுடன் 10லி தண்ணீர் கலந்து தெளிக்கவேண்டும்.
- தத்துப்பூச்சியை கட்டுப்படுத்த, எருக்களைச் செடியை 12 அடி இடைவெளியில் நெல் வயலின் எல்லாப் புறமும் வளர்க்கவோ, நடவோசெய்யலாம்.
- வேர் அழுகல் மற்றும் நூற்புழு தாக்குதலை கட்டுப்படுத்த வேப்பம் புண்ணாக்கை கடைசி உழவிற்குமுன்பு இடவேண்டும்.
- பிரௌன் இலைப்புள்ளி நோயைக் கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு உப்புடன் 15 கிலோ மணல் கலந்து இடவேண்டும்.
- பிரௌன் இலைப்புள்ளி நோயைக் கட்டுப்படுத்த, விதைநெல்லை 20% புதினா இலைக் கரைசலில் ஊறவைத்து விதைக்கவேண்டும்.
- நெல் 'துங்ரோ'நோயைக் கட்டுப்படுத்த, ஆடாதொடை இலைசாற்றை தெளிக்கலாம்.
- பனை ஓலையைக் குச்சியில் கட்டி, வயல் ஓரத்தில் நட்டால், ஓலைக் காற்றில் ஆடும்போது ஏற்படும் ஓசையாக நெல்மணிகளை உண்ணவரும் வாத்து, குருவியிலிருந்து நெல்மணியைக் காக்கலாம்.
- ஒருநெல் கதிரில் 100 நெல்மணிகள் இருந்தால் 20-22 குவிண்டால்/ஏக்கர் மகசூல் கிடைக்கும்.
- 120 நெல்மணிகள் ஒரு கதிரில் இருப்பின், அதுவே முழு மகசூலாகும்.
- 6 அடிக்கு அதிக உயரமுள்ள பெரியமண் குதிரில் அதிக நாள் வரைநெல்லைச் சேமிக்கலாம்.
- சேமிப்புக் கிடங்கில் நொச்சி, புங்கம் இலைகளைப் போட்டால் தானிய சேமிப்பு கிடங்கில் ஏற்படும் பூச்சியைக் கட்டுப்படுத்தலாம்.
- நெல்மணிகள், சேமிப்பதற்கு முன்பு, நெல்மணியுடன் புங்கம், நொச்சி மற்றும் வேம்பு இலைகளைக் கலந்தால் பூச்சித் தாக்கலை தடுக்கலாம்.

**மக்காச்சோளம்**

- மக்காச்சோளத்தை கதிரின் மேல் உறையை உரிக்காமல் இருந்தால் மூன்றுமாதத்திற்குமேல் சேமிக்கலாம்.
- மக்காச்சோள விதையை கோமியத்தில் 12 மணி நேரம் ஊறவைத்து விதைக்கவேண்டும்.
- விதைப்பிற்குமுன்பு, வெந்நீரில் 3-6 மணி ஊறவைத்து, பின்பு நிழலில் உலரவைத்து விதைத்தால், நல்ல முளைப்புத் திறனுடன், குருத்து துளைப்பானையும் கட்டுப்படுத்தமுடியும்.
- தக்காளிக்குபின்பு நடும் போது, அதை மேட்டுப்பாத்தியில் விதைத்தால். நிலம் தயார் செய்யும் செலவுகுறையும்.
- மக்காச்சோளம் கதிர் நன்கு முதிர்ந்து காய்ந்ததை அறிய சில சோளத்தை வாயில் போட்டுகுடித்தால் உலோக ஓசை வரும்.
- கல் படுக்கைமீது, காயவைத்த மக்காச்சோளத் தட்டையை அடுக்கி அதன் மீது நெல் வைக்கோலால் மூடி வைத்தால், அதைகால் நடைத்தீவனமாக ஒரு வருடத்திற்குமேலாக சேமித்து பயன்படுத்தலாம்.

**கம்பு**

- பறவையை விரட்ட, காக்கா போன்ற மாதிரிசெய்து, அதை நீண்ட கம்பில் கட்டி நடுவயலில் வைக்கவேண்டும்.
- நொச்சி இலையை கம்புடன் கலந்து சேமித்தால், பூச்சிதாக்குதல் கட்டுப்படும்.
- கம்புவிதையை உப்புகரைசலில் (1கிலோ 10லி. நீரில்) போட்டால், மிதக்கும் நோய் தாக்கப்பட்டவிதையை நீக்கி நல்ல விதையைப் பெறலாம்.
- விதைப்பிற்கு முன்பு நீரில் இரவு முழுவதும் ஊறவைத்தப்பின் விதைத்தால் விரைவாக முளைக்கும்.
- மேட்டுப்பாத்தி அமைத்து, நாற்றாங்கால் செய்து பின் விதைப்பின் நல்ல நாற்றுக்களைப் பெறமுடியும்.
- நடவுக்குமுன்பு, நாற்றுக்களின் நுனியை கிள்ளி நட்டால், பூச்சியின் முட்டை, வெள்ளை ஈக்களை அப்புறப்படுத்துவதோடு, நுனிகருகல் நோயையும் கட்டுப்படுத்தலாம்.

- இலைகளின் உட்பக்கத்தில் உட்காரும் பச்சைதத்துப் பூச்சியைக் கட்டுப்படுத்த, செங்கல் சூளைசாம்பலை தூவவேண்டும்.
- இலைச்சாறு உறிஞ்சும் பூச்சியைக் கட்டுப்படுத்த, தட்டைப் பயிரை ஊடுப்பயிராக கம்புடன் செய்யவேண்டும்.

**சோளம்**

- சோளக் கதிர்களை அறுவடை செய்தபின் 2 நாள் வெயிலில் காயவைத்து, சோளமணிகளை உதிர்க்காமல் அப்படியே 'பட்டரையில்' சேமித்தால் தேவைப்படும்போது எடுத்து, கதிர் அடித்து, மணிகளைப் பிரித்துப் பயன்படுத்தலாம்.
- மாறுபட்ட காலநிலையிலும், நல்ல முளைப்பு திறனைப் பெற சோளவிதைகளை சாதாரண உப்பு கரைசலில் ஊறவைத்து, விதைக்கவேண்டும்.
- சோளவிதைகளை பசுமாட்டுக் கோமியத்தில் அரைமணி நேரம் ஊறவைத்து, பின் வெயிலில் உலர்த்தி விதைத்தால், வறட்சியைத் தாக்கி வளர்வதோடு கரிப்பூட்டு நோயையும் கட்டுப்படுத்தலாம்.
- விரைவாக முளைக்கவும் தண்டு ஈ தாக்குதலை தடுக்க, போதிய அளவு சுடுநீரில் வைத்து, அதை திறந்தவெளியில் இரவு முழுவதும் ஆறும் படியாக வைத்திருக்க வேண்டும். அடுத்தநாள் விதைப்பிற்கு முன்பு, சோளவிதைகளை குளிர்ந்த நீரில் சிறிது நேரம் வைத்திருந்து பின் விதைத்தால் நல்ல தரமான நாற்றுக்களைப் பெறலாம்.
- இனப்பயிரின் ஊடே நாட்டுக் கலப்பையை ஓடவிட்டால், சராசரி செடி எண்ணிக்கை இருக்கும்படி செய்யலாம்.
- வைகாசி - ஆனி (மே- ஜீன்) மாதத்தில் விதைத்தால்,தண்டுஈமற்றும் துளைப்பான் தாக்குதலைதடுக்கலாம்.
- சோளத்துடன், தட்டைப்பயிரை ஊடும்பயிர் செய்தால், தட்டைப் பயிரின் நெடி, தண்டுதாக்குதலைதடுக்கலாம்.
- அவரையை ஊடுப்பயிர் செய்தாலும் தண்டுதுளைப்பான் தாக்கம் குறையும்.
- வேப்பம் புண்ணாக்கு கரைசலைச் சொட்டுச் சொட்டாக தண்டில் ஊற்றினால் குருத்து துளைப்பான் தாக்குதலை கட்டுப்படுத்தலாம்.

- தாக்குதலிலுள்ள இலைகளின் மீது,சாம்பலைத் தூவினால் பூச்சிதாக்குதல் கட்டுப்படும்.
- பால் பிடிக்கும் தருணத்தில் சாம்பல் தூவுவதால் கதிர் நாவாய் பூச்சிதாக்குதல் கட்டுப்படும்.
- கொத்தமல்லியை சோளத்துடன் கலப்பு பயிராக பயிர் செய்தால் 'ஸ்ரைகா'எனப்படும் தொத்துக்களையை கட்டுப்படுத்தமுடியும்.
- கறுப்பு துணியை நீளமான பூச்சிகள் கட்டி, நடுவயலில் வைத்தால் காக்காவை விரட்டும்.
- தானிய சேமிப்பு பூச்சி தாக்குதலைக் கட்டுப்படுத்த, சோளத்துடன் சாம்பலை கலந்து வைக்கலாம்.

**ராகி**

- அறுவடை சமயத்தில் மழைக்காலத்தில் பாதிக்காத வகையில் இருக்கவேண்டுமெனில் நீண்டநாள் இரகங்களை மானாவாரியாக பயிரிடவேண்டும்.
- 1:10 என்ற விகிதத்தில் கோமியம், தண்ணீர் கலந்துகரைசலில் ராகிவிதையை ஊற வைத்தால், முளைப்புத்திறன் அதிகரிக்கும்.

**துவரை**

- புகையிலை கழிவுகரைசல் சாற்றை தெளிப்பதால், சாறு உறிஞ்சும் பூச்சியையும் புழுக்களையும் கட்டுப்படுத்தலாம்.
- துவரைபயிருடன் செம்மண் கலவைகலந்து, காயவைத்து, சேமித்தால் சேமிப்பு கிடங்கு பூச்சிதாக்குதல் தடுக்கலாம்.
- ஆமணக்குவிதையை வறுத்து, தூளாக்கி அதைத் துவரைப் பயிறுடன் கலந்து சேமித்தால், பூச்சிதாக்குதலைத் தடுக்கலாம்.
- துவரைப் பயிருடன் 'அக்கோரஸ் கலாமஸ்'தாவர இலைத்தூளுடன் (50 கிலோ 1 கிலோ என்ற விகிதத்தில்) கலந்து சேமித்தால் ஒரு வருடம் வரைசேமிக்கமுடியும்.
- நன்கு காயவைத்த துவரைப் பயிரை கோணிசாக்குப்பையில் சேமிக்கும் முன்பாக காய்ந்த நாய்துளசி இலைகளை அடியில் இட்டு பின் சேமித்தால், காய் துளைப்பான் தாக்கத்தைத் தடுக்கலாம்.

- துவரை சேமிக்கப்பட்ட கலன்களில் காய்ந்த மிளகாய் போட்டு வைத்தால், வண்டுதாக்குதலை தடுக்கலாம்.

**உளுந்து**

- மரக்கட்டைக் கொண்டு, காயவைத்து உளுந்து பயிரின் மீது அழுத்தினால் பயிரானது இரண்டாக உடைந்தால் அதுவே போதிய காய்ச்சலுக்கு அறிகுறி.
- உளுந்து பயிரை தனியாக பிரிக்க, காயவைத்து தளத்தின் மீது, மாடுகட்டி. கல் உருளையை இழுக்கவேண்டும்.
- செப்டம்பர் மாதத்தில் பின் 15 நாட்களில் விதைத்தால், அதிகமகசூல் கிடைக்கும்.
- ஏக்கருக்கு 6 லிட்டர் வேப்பஎண்ணெயை தெளித்தால் சாம்பல் நோய் தாக்குதலை கட்டுப்படுத்தலாம்.
- உளுந்து பயிருடன் சாம்பல் கலந்து, மண்கலத்தில் சேமித்தாலும் அதிக நாள் சேமிக்கலாம்.
- உளுந்துபயிருடன் விளக்கெண்ணெய் தடவினால், அதன் தரம் அதிகரிக்கும்.
- இரண்டாக உடைந்த உளுந்தை சேமித்தால், கூண்வண்டு தாக்குதிலிருந்து தப்பலாம்.

**கொண்டைக்கடலை**

- அதிகபனிபெய்யும் மாதங்களில் (ஜனவரி), கொண்டைக்கடலை போட்டால், பயிர் வளர்ச்சி பாதித்து, குறைந்த மகசூல் கிடைக்கும்.

**தட்டைப்பயிறு**

- மஞ்சள் தேமல் நோயைக் கட்டுப்படுத்த, கடைத்தெடுத்த மோரைத் தெளிக்கலாம்.
- நல்ல பாதுகாப்பாக சேமிக்கவேண்டுமெனில், மண் கலத்தில் 5ல் 4 பங்கு தட்டைப்பயிரை இட்டு அதன் மேல் மீதமுள்ள பகுதியில் சாம்பலைக் கொண்டு நிரப்பவேண்டும்.
- ஒரு வருடத்திற்கு மேலாக சேமிக்க வேண்டுமெனில், தட்டைப்பயிற்றை செம்மண் கலவையில் கலந்த, காயவைத்து எடுத்து வைக்கவேண்டும்.

**அவரை - மொச்சை**

- உரிக்காத காய்களை அப்படியேவைத்திருந்தால், நீண்ட நாட்கள் சேமிக்கமுடியும்.

**நிலக்கடலை**

- நிலக்கடலையோடு தட்டைப்பயிர் வகையை ஊடுப்பயிராக பயிரிட்டால், சிவப்பு கம்பளி புழுவை கவரும் செடியாக தட்டைப்பயிறு இருக்கும்.
- உலர் களத்தில் நிலக்கடலையை காயவைத்து, அதை மரக்கட்டைக் கொண்டு அடிப்பதால் கடலையை பிரிக்கலாம்.
- மணல் கலந்த மண்ணே நிலக்கடலை பயிர் செய்வதற்கு ஏற்றது ஏனெனில் அங்கு குறைந்த அளவே பருப்பு இல்லா கடலை உருவாகும்.
- வயல் ஓரங்களில் தட்டைப்பயிறு வளர்ப்பதால், அது சிவப்பு கம்பளிப்புழு கவரும் செடியாகிவிடும்.
- இரவு வேளையில் நிலக்கடலை வயலுக்கு அருகில் பல இடங்களில் வைக்கோல் எரித்தால், அதன் அருகில் வைத்திருக்கும் நீரிலோ ஆமணக்கு கலந்த நீரிலோ, தீ வெளிச்சத்தில் கவரப்பட்ட பூச்சிகள் விழும்.
- சுண்ணாம்பு கரைசலைத் தெளிப்பதால், இலைசுருட்டுப்புழு தாக்குதலை கட்டுப்படுத்தலாம்.
- தண்ணீரை தெளிப்பதால் இலைசுருட்டுப்புழுவை கட்டுப்படுத்தலாம்.
- புகையிலை வெட்டுப்புழுவின் தாக்குதலைக் குறைக்க ஆமணக்குசெடியை வரப்பு பயிராக பயிரிடவேண்டும்.
- கோடை உழவு செய்வதால், சிவப்பு கம்பளிப்புழுவின் கூட்டுப்புழுவை வெளியேற்றி அழிக்க முடியும்.
- 10 கிலோ சோற்றுக் கற்றாழையை நன்றாக அரைத்து தண்ணீரில் கலந்து தெளிப்பதால் சிவப்பு கம்பளிப்புழு தாக்குதலைக் கட்டுப்படுத்தலாம்.
- நிலக்கடலையில் வட்ட'மொசைக்'நோயைக் கட்டுப்படுத்த காய்ந்தசோளம், தென்னை ஓலையை தூளாக்கி 600 செ வெப்ப

நிலையில் தண்ணீரில் ஒருமணி நேரம் கொதிக்கவைத்துப் பின் வடிகட்டி அதில் நீர் கலந்து விதைத்த 10ஆம் நாள் 20 நாள் என இருதடவைத் தெளிப்பதுநல்லது.

- இரண்டாவதுஅல்லது மூன்றாவதுநீர்ப்பாசனம் செய்யும்போது பாசனநீருடன் வேப்பஎண்ணெயை கலந்துவிடுவதால் வேர் அழுகல் நோய் கட்டுப்படும்.
- ஏக்கருக்கு 6லி வேப்ப எண்ணெய் தெளிப்பதால் வேர் அழுகல் நோய் கட்டுப்படும்.
- 4 சதவீதம் வேப்பஎண்ணெய் கரைசல் அல்லது 6 சதவீதம் வேப்பங் ்கொட்டைசாறு தெளிப்பதால் துரு நோயைக் கட்டுப்படுத்தலாம்.

**பாரம்பரியஎண்ணெய் வித்து இரகங்கள்**

**கருப்பு எள்**

இந்த பாரம்பரிய கருப்பு எள் ராமநாதபுரம் மற்றும் பரமகுடி தாலுகாவில் பயிர் செய்யப்படுகிறது. இது சாதாரண வெள்ளை இரகத்தைவிட இந்த கருப்பு இரகத்தில் பல்வேறு இரகங்கள் உள்ளன. இவற்றில் மற்ற இரகங்களைவிட அதிக எண்ணெய் தன்மை கொண்டவைகளாகவும், காலஅளவு (75 நாட்கள்) மற்ற இரகங்களைவிட (90நாட்கள்) அதிகமாகும். இது மானாவாரி பயிராக சாகுபடிசெய்யும்போது மொத்த மகசூல் ஒரு ஏக்கருக்கு 400 கிலோ கிடைக்கும், மானாவாரி பயிராக சாகுபடிசெய்யும்போது மொத்த செலவு ரூ.500 ஆகும். மற்ற இரகங்களை காட்டிலும் இந்த இரகத்தில் அதிக கிளைகளுடன் தீவிர வளர்ச்சிபெற்று வளரும் இரகம். விவசாயிகள் அடுத்த விதைப்பிற்காக இவ்விதைகளை சேமிப்பர். இதற்கென்று தனிப்பட்ட நிரந்தர பருவம் என்று எதுவும் இல்லை. இவற்றை விவசாயிகள் தேவையை அடிப்படையாகக் கொண்டு சித்திரை, வைகாசி அல்லது ஆடி (ஏப்ரல்-ஜீலை) விதைப்பர். இது மழைக்காலத்தில் விதைப்பதற்கு ஏற்றதல்ல, விதைப்பதால் சில பிரச்சனைகளை ஏற்படும்.

**சிவப்பு எள்**

இந்த இரகம் இராமநாபுரம் மாவட்டம் ரகுநாதபுர கிராமத்தில் சாகுபடி செய்யப்படுகிறது. இந்த எள் டிசம்பர் மாதத்தில் விதைத்துமார்ச் மாதத்தில் அறுவடை செய்யலாம். இந்த எள் சிவப்பு நிறமாகவும்

அதிக எண்ணெய் தன்மை கொண்டதாகவும் இருக்கும். இது மானாவாரி பயிராக சாகுபடி செய்யும் போது 320கிலோ/ஏக்கர் மகசூல் கிடைக்கும். இது நல்ல சந்தைவிலையை கொண்டிருக்கும் (ரூ.18/கிலோ). விதையளவு 1.5 கிலோ/ஏக்கர், கடந்த வருட விதைகளை சேகரித்து விதைக்க பயன்படுத்தவேண்டும். மற்ற இரகங்களை காட்டிலும் அதிக எண்ணெய் தன்மை கொண்டிருக்கும். மற்ற இரகங்களின் காலஅளவு (70 நாட்கள்) அதிக காலஅளவு (90 நாட்கள்) கொண்டிருக்கும். அறுவடை செய்யப்பட்ட விதைகளை எந்தவித ரசாயனமும் இன்றி ஒரு வருடகாலம்வரை சேமிக்கலாம்.

**எள்**

- எள் விதைவிதைக்கும்போது மணலுடன் கலந்து விதைப்பதால். ஒரே சீராக விதைக்கமுடியும். மற்ற பயிரைக் காட்டிலும் எள்ளுக்கு அதிக உரம் தேவைப்படும்.
- எள் எண்ணெய் எடுக்கும்போது, பனை வெல்லத்தைச் சேர்ப்பதால் அதிக எண்ணெயை பிழிந்தெடுக்க முடியும்.
- எள் எண்ணெய் (நல்லெண்ணெய்) மண் கலத்தில் சேமித்தால், ஒரு வருடத்திற்கு மேலாக கெடாமல் சேமிக்கமுடியும்.
- சிறுதுண்டு பனை வெல்லத்தை நல்லெண்ணெயில் இடுவதால், அதிகநாள் கெடாமல் வைக்கமுடியும்.

**சூரியகாந்தி**

- அதிக மகசூல் பெற, இரண்டு செடிபூக்களை ஒன்றோடு ஒன்று உரச வேண்டும்.
- விதைப்புக்கு முன்பு, சாணத்தை நிரத்தில் இட்டால், (head) பெருகிவரும்

**ஆமணக்கு**

- ஆமணக்கு வயலைச்சுற்றி 1 கிலோ வெள்ளைச் சோளத்தை இட்டால், அதை உண்ணவரும் பறவைகள் ஆமணக்கு புழுவை உண்ணும்.
- 2 கிலோ வேப்பிலையை 2-3லி. வெள்ளாடு கோமியத்தில் ஊற வைத்து அதை நீர்க்க வேண்டும் 500மிலி நீர்த்த கரைசலில் 15லி நீர் கலந்து தெளித்தால் ஆமணக்கு புழு தாக்குதல் கட்டுப்படும்.

- விதைப்பதற்கு முன்பு விதையை 20 மணி நேரம் நீரில் ஊறவைத்து விதைத்தால் விதைவிரைவாக முளைக்கும்.
- வேப்பஎண்ணெய் 20 மிலியை தூளை கோணிப்பையில் கட்டிதண்ணீரில் 8 மணி நேரம் பையை வைத்திருந்து பின் அக்கரைசலுடன் சோப் கரைசலை கலந்துதெளித்தால் ஆமணக்குப்புழுவைகட்டுப்படுத்தலாம்.
- 5கி வேப்பங்கொட்டை தூளை கோணிப் பையில் கட்டி, தண்ணீரில் ஊறவைத்துப் பின் அக்கரைசலை தெளித்தால் சாறு உறிஞ்சி பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம்.
- ஆமணக்குவிதையை ஒருவருடம் வரை சேமித்து வைத்தாலும் அவைசாகாது.

பருத்தி

- விதையின் மேல் உள்ள பஞ்சை நீக்குவதற்கு, ஈர மாட்டுசாணத்துடன் விதையை கலந்து, 30 நிமிடம் காயவைத்து பின் கல் தரை மீது மெதுவாக உரசினால் பஞ்சு நீங்கிவிடும் பின் தூய்மைப்படுத்த வேண்டும்.
- விதைப்பதற்குமுன் விதையை செம்மண் பூச்சுபூசி, வெயிலில் உலர்த்தி உபயோகித்தால் விதை நன்கு முளைப்பதோடு, விதைப்பிற்கும் ஏதுவாகும்.
- பருத்தி விதையை ஒரு கிலோவிற்கு 200மிலி வேப்ப எண்ணெய் என்ற விகிதத்தில் கலந்து, பசும்மாட்டு சாணத்தை தடவி பின் இரவுமுழுவதும் காயவைத்து விதைத்தால், பூச்சித் தாக்குதலை தவிர்க்கலாம்.
- கடலைப் புண்ணாக்கை 3 முறைபயிர் காலத்தில் இடுவதால், பயிர் வளர்ச்சி துரிதப்படுத்துவதோடு, காய் பிடிப்பதும் அதிகரிக்கும்.
- ஆமணக்குச் செடியை ஊடு பயிராகவோ, வரப்புப் பயிராகவோ பருத்தியுடன் நட்டால் அது புகையிலை வெட்டுப்புழுவை கவரும்.
- மக்காச்சோளம், வெண்டையை ஊடுபயிராக நட்டால் காய்புழு தாக்குதலை குறைக்கலாம்.
- மீன் கழிவை வெல்லத்துடன் 2:1 என்ற விகிதத்தில் வயலில் அங்கு இட்டால், கொக்கு மற்றும் புல்புல் வகைப் பறவைகளை

அவை கவரும் இதன் மூலம் புகையிலை வெட்டுப்புழுவை உண்ணப்பட்டு தாக்குதல் குறையும்.

- 5கிலோ வேப்பங்கொட்டையைத் தூளாக்கி, 100 லிட்டர், தண்ணீரில் இட்டு ஒருநாள் ஊறவிட்டு பின் வடிகட்டி நீர் சேர்த்து, சோப் கரைசல் கலந்து, பருத்திக்கு தெளித்தால் வெள்ளை ஈதாக்குதலை கட்டுப்படுத்தலாம்.
- ஒரு மீட்டர் நீளமுள்ள துணியை 10 துண்டுகளாக வெட்டி, அதை மஞ்சள் தூள் ஊறவைத்துப் பின் காயவைக்கவும். பின் அதை மீண்டும் ஆமணக்கு எண்ணெய் மூழ்கவைத்து. வயலில் பல்வேறு இடங்களில் கட்டவேண்டும். அதன் கீழே சிம்னி விளக்கை வைத்தால் சாறு உறிஞ்சும் பூச்சிகளான வெள்ளை ஈ போன்றவைகளை கட்டுப்படுத்தும்.
- அரளிவிதையை தண்ணீரில் ஊறவைத்து, வடிகட்டி தெளித்தால் வெள்ளை ஈ தாக்குதல் கட்டுப்படும்.
- 600 கிராம் புகையிலையை தண்ணீரில் 2 முதல் 3 நாட்கள் வரை ஊறவைத்து பின் வடிகட்டி தெளித்தால் வெள்ளை ஈ தாக்குதலை கட்டுப்படுத்தலாம்.
- சர்க்கரை கரைசலுடன் வேப்பஎண்ணெய் கலந்து அதை நீரில் கலக்கி பருத்திசெடிமீது தெளித்தால், மாவுப்பூச்சியின் தாக்குதலை கட்டுப்படுத்தலாம்.
- சாம்பலை பருத்தி இலைமீது தூவினால், அசுவின், இலைப்பேனை கட்டுப்படுத்தலாம்.
- சோளம் அல்லது கம்பு பயிரை பருத்திபயிரைச் சுற்றிசாகுபடி செய்தால் வெள்ளை ஈ மற்றும் இலைப்பேன் தாக்குதலைத் தவிர்க்கலாம்.
- வேப்பங்கொட்டையை வசம்புடன் சேர்த்து தூளாக்கி, இரவு முழுவதும் நீரில் ஊறவைத்து, பின் வடிகட்டி, பயிருக்கு மறுநாள் தெளித்தால் எல்லாவித பூச்சி தாக்குதலையும் கட்டுப்படுத்தலாம்.
- பருத்தி பஞ்சை காலைவேளையில் மட்டும் எடுத்தால் தூசி படுவது தவிர்க்கலாம்.

- பருத்தியில் பூக்களும், இளங்காய்களும் விழுகாமல் இருக்க 50 மிலி ஆமணக்கு எண்ணெய்யை ஒவ்வொரு செடிக்கும் பயன்படுத்துவதால், செடி அருகே வெப்பம் குறைந்து, உதிர்வது தடுக்கப்படும்.
- 'மகா' என்று அழைக்கப்படும் பருவத்தில்,பெய்யும் மழைநீரைச் சேமித்து, பயிருக்கு பின் பயன்படுத்தினால் அது வளர்ச்சி ஊக்கியாக செயல்படுகிறது.
- பருத்தியில் நல்ல அதிக உரம், மழைப் பெறப்பட்டபகுதியில் உள்ள நன்கு உயரமாக வளரும். அதை அப்படியேவிடாமல் அதன் நுனியைக் கிள்ளிவிட்டால் அதிகமாக காய் பிடிக்கும் (குஜராத்).
- பருத்தி செடியைபனியின் பாதிப்பிலிருந்து காக்க, பருத்தி சேடி வயலிற்கு அருகில் சாணி எரு, புல் கழிவு, வீணான எஞ்சின் ஆயிலைப் பயன்படுத்தி புகை மூட்டம் செய்தும், நீர்ப்பாய்ச்சியும் காக்கலாம். சில விவசாயிகள் உயரமான செடியை பருத்தி வயலைச் சுற்றி அமைத்து, பனியிலிருந்து பருத்திச் செடியைக் காக்கலாம் (குஜராத்).
- பருத்தியில், அசுவினி தாக்குதலைத் தடுக்க எருக்கலை இலையை நீர்ப்பாய்ச்சின வாய்க்காலில் இடவேண்டும்.
- கடுகுசெடியில் அசுவனி தாக்குதலைக் கட்டுப்படுத்த வேப்பிலை மற்றும் அதன் சிறிய தண்டுகளை எரித்து சாம்பலாக்கி, அந்த சாம்பலை 'பாலிடால்' தூளுடன் கலந்து தூவலாம்.
- பயறுவகைப் பயிர்களில் அசுவினித் தாக்குதலைக் கட்டுப்படுத்த புகையிலை வடிநீருடன் சோப் கரைசல் சேர்த்துதெளிக்கலாம்.
- 'குதிரைமசால்' என்ற தீவனப்பயிரில் ஏற்படும் அசுவினியைக் கட்டுப்படுத்த, எருக்கலை கிளையை வெட்டியவுடன் உடனே நீர்ப்பாசன வாய்க்காலில் போட்டுவைக்கலாம்.
- பருத்தியில் அசுவினி தாக்குதலைக் கட்டுப்படுத்த, ஆமணக்கு எண்ணெய் சிறிதளவு பாசனநீருடன் கலந்துவிடலாம்.
- குதிரைமசால் பயிரில் அசுவினியைக் கட்டுப்படுத்த, அடுப்பு சாம்பலையோ அல்லது சாணிஎரு சாம்பலையோ தூவலாம்.

- பருத்தியால் அசுவினி மற்றும் புள்ளிக்காய்ப்புழு கூட்டுத் தாக்குதலைக் கட்டுப்படுத்த காய்ந்த புகையிலை இலை 250 கிராம் கிரகாசி 300 கிராமுடன் சிட்ரிக் அமிலம் கலந்து பின் 12 லிட்டர் நீர் சேர்த்து கொதிக்கவைத்து, வடிகட்டி அதில் 250 மிலி மருந்து 15 லிட்டர் தண்ணீர் என்ற விகிதத்தில் கலந்து ஒரு தெளிப்பானுக்கு என்னும் அளவில் 4 தெளிப்பான் அளவு அடித்தால் பூச்சிக் கட்டுப்படுத்துவதோடு, பருத்திச் செடியில் நன்கு வளரும் (குஜராத்).
- பருத்தியில் காணப்படும் தரைக் கூண்வண்டை கட்டுப்படுத்த, 20-25 கிலோ வெங்காயத்தை சணல் பையில் இட்டு, ஒரு மரக்கட்டைக் கொண்டு நசுக்கி, அப்படியே அந்த சணல் பையை நீரோட்டத்தில் போட்டால் போதும் (குஜராத்).
- பருத்தி, கனகாம்பரம் மற்றும் இதர அழகு பூச்செடிகளுக்கு 'அகேல்' வெட்டிக்கோட்டைவேம்பு, புங்கம் புண்ணாக்கும், வேப்பம் புண்ணாக்கு ஆகியவற்றை ஒன்றாக இடித்து, அதைக் கோமியத்தில் ஊறவைத்து, பின் வடிகட்டி அத்துடன் 1:8 பங்குநீர் சேர்த்து தெளித்தால், பூச்சிநோய்கள் தாக்குதல் கட்டுப் படுத்தப்படும்.
- பருத்தியைத் தாக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள்
- கைவினைமுறைசாணி கொண்டு பூஞ்சநீக்கம் செய்து, பூச்சியினால் சேதாரம் அடைந்த விதைகளை நீக்குதல், செடியில் புழுக்களை கையில் சேகரித்தல் அழித்தல், சேதாரம் அடைந்த பயிர் பாகத்தை நீக்குதல்.
- பயிர்சுழற்சி முறைவயலில் களைகளை நீக்கி எப்போது சுத்தாகவைத்தல், ஊடுபயிர், கலப்பு பயிராக சோளம், மக்காச்சோளம், பச்சைப்பயிறு, உளுந்து போன்றவற்றை வளர்த்தல். முக்கிய பூச்சிகளுக்கு எதிரியாக உள்ள பூச்சிகளை பாதுகாத்தல்.
- தாவர பூச்சிக்கொல்லிகளான வேப்பிலைசாறு, வேப்பங்கொட்டை சாறுதெளித்தல்.
- செருப்பு தைப்பவர்கள் தோல் ஊறவைத்திருக்கும் சாம்பல் நீரை சாறு உறிஞ்சும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த தெளித்தல் அல்லது

நன்கு புளித்த மோரையோ அல்லது நொதித்த கோமியத்துடன் வேப்பங்கொட்டைசாறு கலந்தோ அல்லது மண்ணென்ணெயை தெளித்தால் பூச்சிகளின் கூட்டுசேதாரத்தைக் கட்டுப்படுத்தலாம் (மத்தியப்பிரதேசம்).

- பருத்தியில் ஏற்படும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த, பூச்சிக்கொல்லிகள் அல்லாத பிற முறைகளைப் பயன்படுத்தி உற்பத்தி செலவை 25 சதவீதம் குறைப்பதோடு அதிக லாபத்தையும் ஈட்ட, கோடையில் ஆழ் உழவுசெய்தல் ஒளிபொறி வைத்தல், நுனிக் கிள்ளுகதால் புள்ளிகாய்ப் புழுவின் முட்டை, புழுக்களை அகற்றுதல். சாறு உறிஞ்சும் பூச்சிகளுக்கு எதிர்ப்புள்ள இரகங்களை தேர்வுசெய்து நடுதல், 5 சதவீதம் வேப்பங்கொட்டைபருப்பு சாறு அடித்தல், புகையிலைசாறு தெளித்தல், மிளகாய் - பூண்டுகரைசல் தெளித்தல். சாணிமற்றும் கேமியம் கரைசல் தெளித்தல், பறவைகள் பூச்சிபுழுக்களை பிடிக்கவகைச் செய்தல், பூச்சித் தாக்கிய காய்களை சேகரித்து ஆழித்தல் போன்ற முறைகளைக் கையாளலாம்.
- பருத்தி வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்த பேப்பர் கழிவுகளை ஆமணக்கு எண்ணெய் அல்லது 'கிரீஸ்'பெடரோல் கழிவுஎண்ணெயில் தோய்த்து, வயலில் இடவேண்டும். பின் தெளிப்பான் கொண்டு செடிமீது காற்றைதெளித்தால்,செடியின் சாற்றைப் பூச்சியான வெள்ளை ஈ, செடியிலிருந்து விடுபட்டு, எண்ணெய் பேப்பர் கழிவின் மேல் ஒட்டிவிடும். இவ்வாறு செய்தால் 90 சதவீதம் வெள்ளை ஈயை வெற்றிகரமாக குறைக்கலாம் (பாண்டிச்சேரி).
- பருத்தியில், தாய் பூச்சிகளைக் கவர்ந்து, அழிக்க, 500 கிராம், சர்க்கரையை சமையல் எண்ணெய் கலந்து நொதிக்க வைத்து, அந்தக் கலனில் சமையல் எண்ணெய் சில துளி சேர்த்து, வயல்களில் பருத்தி வரிசைக்கு ஊடே வைத்தால், அக்கரைசலில் வாடாமல் பூச்சி கவரப்பட்டு அதில் விழுந்து அழிந்துவிடும்.
- பருத்தியைப் பாதிக்கும் புழுக்களை எருக்கலை பாலைத் தண்ணீருடன் 1:15 விகிதத்தில் கலந்து தெளித்தால், 3 நாட்களில் திறம்பட கட்டுப்படுத்தும் இத்தெளிப்புக்கு பின்பு வரும் தளிர்களில் புழுத் தொல்லை இராது (குஜராத்).

- பருத்தியில் பச்சைக காய்ப்புழுவைக் கட்டுப்படுத்த, 250-300 கிராம் ஊமத்தை இலையுடன் கூடிய தண்டினை 1 லிட்டர் சூடானநீரில் போட்டுவைத்து, பின் அந்தத் தண்ணீர் குளிர்ந்தவுடன் நீரை எடுத்து அதில் 15 லிட்ட் தண்ணீர் சேர்த்து தெளித்தால் 6-7 மணி நேரத்திற்கு பூச்சித் தாக்குதல் குறையும். இவ்வாறு ஒரு மாதம் ஆன செடிக்கு செய்தால் நல்ல கட்டுப்பாட்டைத் தரும் (குஜராத்).
- பருத்தியில் சிவப்புப் புள்ளிநோயைக் கட்டுப்படத்த, அது தோன்றும்போதோ அல்லது முன் தடுப்பாகவோ நீர்த்த மோரை, பயிர்மீது தெளித்தால போதும் (குஜராத்).
- பருத்தியில் வெள்ளை ஈக்கு, பூச்சிக்கொல்லி மருந்துகளுடன் 30 கிராம்/15லிட்டர் பூச்சிக்கொல்லி மருந்துக் கலவைக்கு என்ற அளவில் புகையிலைத் தூளைக் கலந்து அடிக்கலாம் (குஜராத்).
- பருத்தி வயலைச் சுற்றி 2-3 வரிசைவெண்டைப் பயிரை நட்டால், பருத்திதாக்கும் புள்ளிக் காய்ப்புழு, படைப்புழு, தத்துப்பூச்சி முதலில் வெண்டையைத் தாக்கும் எனவே அந்த வெண்டையைப் பிடுங்கி அழிப்பதால் பருத்தியை பூச்சித் தாக்குதலிலிருந்து தடுக்கலாம்.
- பருத்திகாய்ப்புழு, கொண்டைக் கடலைமற்றும் துவரைகாய்த் துளைப்பானைக் கட்டுபடுத்த 5 சதவீதம் வேப்பங்கொட்டை கரைசலைத் தெளிக்கலாம்.
- பருத்தியை புழுக்களை அழிக்க, மண்ணெண்ணெயை அரவில் பருத்தி வயலில் அடிப்பதால், இரவில் உண்ணும் புழுக்களை அழிக்கமுடியும். மேலும் அவை பகலில் நிலத்தில் அடிக்கு போகிறது, மண்ணெண்ணெய் கலனை நீர்ப்பாசனம் செய்யும்போது, அந்த வாய்க்காலின்மீது இருக்கும்படி அனைத்து பகுதிகளுக்கும் சென்று, தெளிப்பதைக் காட்டிலும் அதிகமாக புழுக்களைக் கட்டுப்படுத்துகிறது. ஆனாலும் நன்மை செய்யும் சில நிலத்தில் வாழும் புழுக்களையும் அழித்துவிடுகிறது (குஜராத்).
- அரளி விதையை / காய்களை இடித்து, இரவு முழுவதும் நீரில் ஊறவைக்க வேண்டும். பின் அதை வடிகட்டி, தண்ணீர் சேர்த்து பருத்தி வயலில் தெளிப்பதால் 70 சதவீதம் வெள்ளைஈக்களைக் கட்டுப்படுத்தலாம்.

- பருத்தியில், 1 கிலோ சர்க்கரையை 12 லிட்டர் தண்ணீரில் கரைத்து வடிகட்டி (கனமாக பருத்தி துணிக்கொண்டு), தெளித்தால், சிறிய பூச்சியான வெள்ளைஈ, அதன் முட்டைமீது ஒட்டிக்கொண்டு விடுவதால், அவை கொல்லப்படுகின்றது. ஏக்கருக்கு 56 லிட்டர் கரைசல் தேவைப்படுகிறது. அம்முறை ஒரே ஒருமறை மட்டுமே நவம்பர் - டிசம்பர் மாதங்களில் செய்யப்படுகிறது. ஏனெனில் அக்கரைசல் 'மதியா' நோய் ஏற்பட காரணமாகிறது.

- புகையிலை இலை / விதை, வேப்பங்கொட்டை / வேப்பிலையை தண்ணீர் போட்டுகொதிக்கவைத்து, தெளித்தால் பருத்தியில் பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம்.

- 20-25 கிலோ சாதாரணஉப்பை, இயற்கைஉரம் 10 வண்டியோடு கலந்து, பருத்திசால்களில் இட்டால், செடிகளுக்கு பூச்சி எதிர்ப்புச் சக்தி உருவாக்கி, மகசூல் 3ல் ஒருபங்கு அதிகரிக்கும் (குஜராத்).

- விவசாயிகள், பசுமாட்டுசாணத்தை வீட்டில் வளர்க்கும் மாடுகளிலிருந்து பெற்று உரமாக பயன்படுத்தகிறார்கள். அவ்வாறு மாட்டுகொட்டிலுக்கு உள்ளேயும், வெளியேயும் சேகரிக்கும் சாணத்தை தாழ்ந்த பகுதிகளில் வீட்டிற்கு வெளியே மொத்தமாகவோ, உயர்ந்த பகுதி ஏனில, நேரடியாக வயலிலும் குவியலாகசேமிக்கலாம். அதை மணல்சாந்து கொண்டு மூடிவைத்தால் காற்றினால் அவை பறக்காமல் இருக்கும். பின்பு வயலுக்கு மூங்கில் கூடைகளில் அள்ளி மனிதர்களோ, குதிரைகளைக் கொண்டு வயலில் சேர்க்கும். அப்படிப்போக ஏக்கருக்கு 125-250 குவிண்டால் எரு தேவைப்படும். விவசாயிகள் ஆட்டு எருவைவிட மாட்டு எருவையே அதிகம் இடுகிறார்கள். ஏனென்றால் ஆட்டுஎரு, அதிக அளவுதழை (3 %), மணி (1%), சாம்பல் (2 %), சத்துக்களை கொண்டதால் அதிகம் இட்டால் பயிர்களை எரித்துவிடும், காயவைத்துவிடும் (இமாச்சலபிரதேசம்).

- பருத்திவிதைக்கு உள்ள பஞ்சை நீக்கவிதைப்புக்கு ஒருநாள் முன்பு, தகுந்த அளவு எடுத்து, கரைத்து / சேர்த்து, அதை விதைமீது தெளிக்கவேண்டும். பின் அவ்விதைகளை தேய்த்தால் நன்றாக கலவைஒட்டிக் கொள்ளும். பின அதை நிழலில் உலரவைத்து, முளைக்க பயன்படுத்தினால் சுலபமாக விதைக்க

முடிவதோடு அல்லாமல் நல்ல முளைப்புதிறனுடனும் 10 சதவீதம் கூடுதல் மகசூலையும் தரும் (மகாராஸ்டிரா).

- காரிப் பருவத்தில் மகாராஸ்டிராவில் பருத்தியும், கம்பும் பயிரிட்டு வந்தனர். பின் பருத்தி பயிரிடும் பரப்பு அதிகமானதால், உணவுக்கும் தீவனத்திற்கும் தட்டுப்பாடு ஏற்பட்டதைத் தொடர்ந்து, விவசாயிகள் காரீப் பருத்திக்கு பின் ஜனவரி மாதத்தில் ள அதிகஅளவு (இரண்டு மடங்கு) கம்புவிதையை பயன்படுத்தி, சாகுபடிசெய்ததில் அதிக மகசூலும், பூச்சிநோய்த் தாக்காததரம் வாய்ந்தகம்பும் தீவனதட்டையும் கிடைத்தது.
- பருத்தியை, மழைவரும் காலத்திற்கு ( 8-10 நாட்களுக்கு) முன்பே, விதைத்தால், போதியளவு மழைக் கிடைத்தவுடன் முளைக்கத் தொடங்கி 10 சதவீதம் மகசூலைதரும், போதிய அளவு மழைக் கிடைக்காவிடில் திரும்ப விதைக்க வேண்டி வரும். இதைப்போல், நெல், துவரை, வறட்டுவிதைப்பு செய்யலாம் (மகாராஸ்டிரா).
- விவசாயிகள் போதியளவு நீர்ப்பாசனவசதி இருந்தால், 3-4 பருத்தி பஞ்சு எடுத்தபின், மறுதாம்பு பயிராகவிட்டு, உரமிட்டு, 2-3 நீர்க் கட்டியினால், எக்டருக்கு 10-15 குவிண்டால், அதிகமான விளைச்சல் கிடைக்கும் (மகாராஸ்டிரா).
- ஆழமான கருமண்ணில் புன்செய்ப் பயிராக மழைக்காலத்தில் பயிரிடும் பருத்தி நவம்பர் மாதங்கள் வரை மகசூல் தருகிறது. ஆனால் தற்சமயம் மழையானது நவம்பர் - டிசம்பர் மாதங்களில் பெய்வதால், புதிய தளிர்கள், கிளைகள், பூக்கள், காய்கள் விடுகிறது, எனவே களையெடுப்பு மட்டும் செய்தால், பூக்கும் பூக்கள் 2 மாதங்களில் காயாகவெடித்து மட்டும் செய்தால், பூக்கும் ஒரு எக்டருக்கு கிடைக்க வாய்ப்புண்டு.
- பருத்திபயிருடன் சோளமும் கலந்து கலப்புப் பயிராக விதைத்தால், சோளப் பயிரை உண்ணவரும் பறவைகள், பருத்தி செடியில் உட்காரும் பூச்சிகளைச் சேர்த்து தின்றுவிடும் (மகாராஸ்டிரா).
- பிளாஸ்டிக் கலனில் மாவை 200 லிட்டரில் கலந்து, அப்படியே உரக் குவியலுக்கு அடியில் 8 நாட்கள் வைத்திருந்தால் நன்கு

புளித்துவிடும். அதை பயிருக்குபச்சைக் காய்ப்புழுவைக் கட்டுப்படுத்தும் (மகாராஸ்டிரா).

- பூண்டினை இடித்து தண்ணீரில் போட்டு, அதை வடிகட்டி அத்துடன் மானோகுரோட்டாபாஸ் கலந்து தெளித்தால் பருத்தி காய்ப்புழுவைக் கட்டுப்படுத்தலாம் (மகாராஸ்டிரா).
- பருத்திசெடிக்கு சிறிதளவு சர்க்கரைப் போட்டால், எறும்புகள் அதிகமா கவரும். பருத்தியைச் சேதப்படுத்தும் அசுவினி, காய்ப்புழுக்களை அதிக அளவு செலவில்லாமல் எந்த தொழில்நுட்ப வேலையும் இல்லாமல் கட்டுப்படுத்தும் (மகாராஸ்டிரா).
- புகையிலையை இரவுமுழுவதும் நீரில் ஊறவைத்து வடிகட்டி தெளித்தால் காய்ப்புழுவைக் கட்டுப்படுத்தும் (மகாரா'டிரா).
- 500 கிராம் பூண்டுமற்றும் சிவப்புமிளகாய் அரைத்து சாறு எடுத்து அதை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து, 200 கிராம் சோப்பு சேர்ந்து, தெளித்தால் பருத்தியில் சாறு உறிஞ்சும் பூச்சிகளுடன் மற்ற பூச்சிகளும் கட்டுப்படுத்தலாம்.
- பருத்தி, மிளகாய், வெங்காயம் இவற்றில் காய்ப்புழு மற்றும் சாறுஉறிஞ்சும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த, 5கிலோ வேப்பங் கொட்டையை வெயிலில் காயவைத்து, தூளாக்கி 10 லிட்டர் தண்ணீரில் இரவு முழுவதும் ஊறவைத்து 90 லிட்டர் தண்ணீரும் 500 கிராம் சோப்பை ஒட்டுத் திரவமாக சேர்த்து தெளிக்கலாம்.
- பருத்தி மற்றும் காய்கறிப் பயிர்களில் அசுவின், தத்துப்பூச்சி, வெள்ளைஈ போன்றவற்றைக் கட்டுப்படுத்த, சாம்பலை தூவலாம். பின் பசுமாட்டு கோமியம் மண்ணெண்ணெயை, சோப்பு தூளாக்கி கலந்துதெளித்து மேற்கண்ட பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம் (மகாராஸ்டிரா).
- உணவுத் தானியங்களைச் சேமிக்க, மூங்கில், பருத்தி குச்சியிலான கலன்களைத் தயாரித்து, அதில் இட்டு பின் காற்றுபுகாதவாறு மண், சரணிசாந்தைப் பூசிசேமித்தால், அதிக நாள் கெடாமல் பூச்சித் தாக்குதல் இல்லாமல் இருக்கும். கலனில் வேப்பிலையைத் தானியத்துடன் கலந்தும் வைக்கலாம் (மகாராஸ்டிரா).

- விதைகள் மீது சாணி, மண் இவற்றை சமஅளவுக் கொண்ட சாந்தைத் தெளித்து பின் விதைகள்மீது சாந்து நன்றாக படும்படி தரையில் தேய்த்து, விதைகளை காயவைத்து விதைக்கப் பயன்படுத்தலாம். சுலபமாக விதைக்க மூடியும், அத்துடன் விதைகள் நன்கு முளைத்து அதிக மகசூல் தரும் (மகாராஸ்டிரா).
- பல்வேறுபட்ட பயிர் இனங்களைக் கலந்து பழங்காலத்திலிருந்து விதைத்து வருகிறார்கள். அதனால் பூச்சிநோய்களுக்கு குறைகிறது. மக்காச்சோளம், செண்டுமல்லி - நூற்புழு எண்ணிக்கை குறைகிறது. தக்காளி, சணக்கு - தக்காளி மகசூல் கூடுகிறது. நெல், பூண்டு, மக்காச்சோளம், தக்காளி - நூற்புழு எண்ணிக்கை குறைகிறது. நெல், புகையிலை, நெல் - வேர் முடிச்சு நூற்புழுகட்டுப்படும். சூரியகாந்தி பூ பருத்தி - இலைதத்துப்பூச்சி சேதாரம் குறையும். சோளம் பூ தட்டைப்பயிறு (1:1)- சோளம் தண்டுதுளைப்பான் கோதுமை பூ கொண்டைக் கடலை (1:1)- காய் துளைப்பான் தாக்குதல் குறையும் ஆமணக்கு பூ தட்டைப்பயிறு - அசுவினிதாக்குதல் குறையும்.
- பருத்திவிதையை ராகி, கம்பு பயிருக்குமுன் உழவு செய்யாமல், நேரடியாகதண்ணீர் விட்டவுடன் கையினாலேவிதைக்கலாம். (கோயமுத்தூர்).
- பச்சைபுகையிலை 1-5 - 2.0 கிலோஎடுத்து 5-6 லிட்டர் தண்ணீரில் சேர்த்து, நல்ல அடர் பழுப்புநிறமாக மாறும் வரை கொதிக்கவைக்கவும். அதில் 4-5 லிட்டர் வடிகட்டிய நீருடன் 70-80 லிட்டர் நீர் சேர்த்து சோயாபீன்ஸ் ள (ப்சைகாய் புழு தாக்கப்பட்ட பயிரில்) தெளித்தால் கட்டுப்படுத்தலாம். இதுபோல் 5-6 நாட்கள் இடைவெளிவிட்டு செய்யவேண்டும்.
- அசுவினி தாக்கப்பட்ட பயிர்களில் வேப்பங்கொட்டைசாறு அல்லது பூச்சிக் கொல்லும் இலைகளின் சாற்றை தெளிக்கலாம் (உத்திராஞ்சல்).
- பருத்தியுடன் சுற்றிஏக்கருக்கு 100 ஆமணக்கு விதையை ஊன்றி வளர்த்தால், படைப்புழுவானது அகன்ற இலையான ஆமணக்கு இலையில் முட்டையிட்டும் பின் அந்தப் புழுக்கள், ஆமணக்கு இலையை சேதப்படுத்தும்/உண்ணும் அத்தகைய

இலைகளைபிடுங்கி அழிப்பதில் பருத்திசெடி பாதுகாக்கப்படுகிறது (ஆந்திரப்பிரதேசம்).

- பருத்தியில் பூச்சித் தாக்குதலுக்கு, 500 கிராம் வேப்பங்கொட்டை, 100 கிராம் புகையிலை, 100 கிராம், 250 கிராம் பெருங்காயம் 50 கிராம் விதைகளை இடித்து சாறு எடுத்து ஒரு ஏக்கருக்கு தெளித்தால் பருத்திபூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம் (தமிழ்நாடு).
- கோமியம் மற்றும் பசுமாட்டுசாணம் இவற்றை தண்ணீர் கரைத்து, சிலநாட்கள் வைத்திருந்து வடிகட்டி, தெளித்தால் சாறுஉறிஞ்சும் பூச்சகளும், இலைவெட்டி பூச்சியும் கட்டுப்பட்டு, பயிர் நன்கு வளரும் (சாணி - சத்துக்கள் கொடுக்கவும்) கோமியம் - பூச்சிக் கொல்லியாகவும் செயல்படுகிறது (கர்நாடகா).
- பருத்தி,மிளகாய், எலுமிச்சையில் ஏற்படும் பூஞ்சாணங்களைக் கட்டுப்படுத்த, பஞ்சகாவ்யாவை தயாரித்து (5:2:1/2:2: 1/2 -பால், தயிர், நெய், கோமியம், சாணிஎன்ற விகிதத்தில் 10 லிட்டர் தண்ணீரில் சேர்த்து, 7 நாட்கள் வைத்திருந்து தெளிக்கப் பயன்படுத்துதல்) தெளிக்கலாம். இதனால் மேலும் இலை உதிர்வதும் தடுக்கப்படுகிறது. பூக்கள் நன்றாக காய்பிடிக்க செய்கிறது (தமிழ்நாடு).
- பெரியகும்முட்டிகாய், பிரண்டைகொடி, மஞ்சள் அரளிவிதை, வேப்பங்கொட்டை இவற்றை அரைத்து, விழுதுதயாரித்துஅப்படியே 10 நாட்கள் வைத்திருக்கவேண்டும். அத்துடன் 10 நாள் ஆன தக்கைப் பூண்டு அதைததவிழுதையும் சேர்த்து, மெல்லிய துணியினால் வடிகட்டி, அதில் தண்ணீர் சேர்த்து தெளித்தால் பருத்தியைதாக்கும் வெட்டுப்புழுவை திறம்பட எந்தபக்க விளைவுகளும் இல்லாமல் கட்டுப்படுத்தலாம் (தமிழ்நாடு).

**கரும்பு**

- அதிகமகசூல் கரும்பில் பெற,நடவுக்குமுன் குளத்துமண்ணை இடுதல்.
- ஆட்டுகிடைவைப்பது அல்லது ஆட்டுபுழுக்கயை உரமாக இடுவதால் சர்க்கரை அளவு கூடும்.
- கரும்புசோகை உரிப்பதால் செதில் பூச்சி மற்றும் மாவுபூச்சியின் தாக்குதலை கட்டுப்படுத்தலாம்.

- அடிக்கடிநீர் கட்டுவதால், கரையான் தாக்குதலைக் கட்டுப்படுத்தலாம்.
- செங்கல் சூளைச் சாம்பலை 2-3 மாதம் ஆன கரும்புப் பயிரில் இடுவதால், இளந்தண்டு துளைப்பான் தாக்குதல் கட்டுப்படும்.
- வேப்பங்கொட்டை அல்லது வேப்பம் புண்ணாக்கை தூளாக்கி தண்ணீரில் இரவு முழுவதும் ஊறவைத்து வடிகட்டி, பயிர்மீது தெளித்தால் இளந் தண்டுதுளைப்பான் தாக்குதலைக் கட்டுப்படுத்தலாம்.
- 200 கிலோ எக்டருக்கு காய்ந்த வேப்பம் பழத்தை தூளாக்கி, இட்டால் தண்டுதுளைப்பான் மற்றும் பூஞ்சாண நோய் தாக்குதலை கட்டுப்படுத்தலாம்.
- நாட்டுச் சர்க்கரை தயாரிக்கும் போது, கரும்புசாற்றை வாயகன்ற இரும்பு கொப்பரையில் ஊற்றி 1 மணி நேரம் கொதிக்கவைக்க வேண்டும். பின் சமையல் சோடாஉப்பை இட்டு தூசிகளைநீக்கி, பின் கலர் பவுடரைபோட்டுதிரும்ப 1 மணி நேரம் தொடர்ச்சியாக கொதிக்க வைக்கவேண்டும். அப்போது அதுமாவு பதம் வந்தவுடன் அச்சிலோ அல்லதுகையினாலோ வெல்லம் பிடித்துதயாரிக்கலாம்.

**வாழை**

- பழுக்காத வாழை இலையை பெரியகலனில் ∴ பாத்திரத்தில் இட்டு, ஊதுபத்தி கொளுத்தி அதன் மூடியை போட்டுவிட்டால், 12 மணி நேரத்திற்குள் பழுத்துவிடும்.
- விரைவில் வாழைக் குலையை பழுக்கவைக்க, சுண்ணாம்பு கரைசலை அதன்மீது தெளித்தால் போதும்.
- இலகுவாக பழுக்கவைக்க, குலைகளில் ஆங்காங்கு வேப்பிலையைச் சொருகினால் போதுமே.
- 25 கிராம் வேப்பம் புண்ணாக்குமற்றும் ஆமணக்கு புண்ணாக்கு கலந்து கலவையை ஒவ்வொரு மரத்தை நட்ட 6ம் நாளில் சுற்றிலும் இட்டால் பூச்சிதாக்குதல் கட்டுப்படுத்தும்.
- இலைப்புள்ளி நோயைக் கட்டுப்படுத்த, நீர்த்த புகையிலை கரைசலை தெளிக்கலாம்.

- அரை அடி உயரமுள்ள இரண்டரை கிலோ எடையுள்ள கிழங்கை விதைக்க பயன்படுத்தவேண்டும்.
- கிழங்கு அழுகல் நோயை தடுக்க, வாழைக் கிழங்கை 100 லிட்டர் தண்ணீரில் 1 லிட்டர் வேப்பஎண்ணெய் கலந்த கரைசலில் மூழ்க வைத்து பின் நடவுசெய்யப் பயன்படுத்தவேண்டும்.
- கடலை புண்ணாக்கு இட்டால் வாழையை அதிக மகசூல் கிடைக்கும்.
- வாழைக் குலையைச் சேமிக்கும்போது, ஏற்படும் வாழைப்பழ அழுகலை கட்டுப்படுத்த, வாழைக் குலைகாம்பை 10 % துளசி இலைச்சாறு கரைசலிலோ 1% வேப்பஎண்ணெய் கரைசலிலோ நனைத்து பின் சேமிக்கவேண்டும்.
- செண்டுமல்லியை வாழைத் தோட்டத்தைச் சுற்றிநட்டால் அது காற்று தடுப்பானாக செயல்பட்டு,காற்றினால் ஏற்படும் சேதாரத்தை தடுக்கும்.
- சித்தகத்தி மரத்தை வாழைத் தோட்டத்தைச் சுற்றிநட்டால் அது காற்று தடுப்பானால் செயல்பட்டு, காற்றினால் ஏற்படும் சேதாரத்தைத் தடுக்கும்.
- வாழைசீப்பு உள்ள கலனில் வேப்பிலையை இட்டால், 4 நாட்களில் பழுத்துவிடும்.

மா

- வேப்பஎண்ணெயைத் தத்துப்பூச்சிகட்டுப்படுத்ததெளிக்கலாம்.
- மாந்தோப்பிற்குள் சூரியகாந்தியைபயிர் செய்தால், தேனீக்களை கவர்ந்து, அதிக மகரந்த சேர்க்கை நடந்து, மாமகசூல் அதிகரிக்கும்.
- ஆவாரம் குலையை ஒரு அடுக்கு பரப்பி அதன்மீது மா காய்களை இட்டுபின் ஆவாரம் குலையைப் பரப்பினால், விரைவாக மாபழம் பழுக்கும்.

**திராட்சை**

- பழுப்பு நிறமுள்ள 1/2 நிறமுள்ள நல்ல மொட்டு உள்ள தண்டுப் பகுதியை நடவுக்குப் பயன்படுத்த வேண்டும்.

- கடலைபுண்ணாக்கை ஊறவைத்து, கரைத்து, அக்கரைசலை 1 வாளி ஒரு குழிக்கு ஊற்றினால் நல்ல தரமான திராட்சையையும் அதிக மகசூலையும் பெறலாம்.
- 10 அடி இடைவெளியில் நடவுக்கு 3 மாதத்திற்கு முன்பு குழித் தோண்டி, அதில் கொழிஞ்சி,அகேவ்,எருக்களைக் போன்றபசுந்தாள் இலைகளைடு மண் கொண்டு மூடினால், அவை மட்கிவிடும். பின் நடவுசெய்தால் அதிகமகசூல் கிடைக்கும்.
- ஒவ்வொருதிராட்சைக் கொடியைச் சுற்றி மழைக்காலத்திற்கு முன்பு வட்ட வடிவ குழித்தோண்டி அதில் பசுந்தாள் உரச்செடி மற்றும் தொழுஉரத்தை 3:1 விகிதத்தில் இட்டு, மண் கொண்டு மூடினால், நல்லமகசூல் பெறலாம்.

**கொய்யா**

அனைத்து பூச்சிகளையும் கட்டுப்படுத்த 2 கிலோ நறுக்கிய எருக்கலை இலையை 3 கிவேப்பம் புண்ணாக்குஉடன் கலந்து 20 லிட்டர் தண்ணீரில் 4 நாள் ஊறவைத்து, பின் 200 லிட்டர் தண்ணீரில் கலந்துதெளிக்கலாம்.

**எலுமிச்சை**

- இறந்தநாயை, வேர்ப்பகுதியில் புதைத்தால் எலுமிச்சையில் அதிக மகசூல் கிடைக்கும்.
- ஒருவாளி ∴ மரம் என்ற அளவில் பன்றி எருவை இட்டால், பூ உதிர்தல் தடுக்கப்பட்டு மகசூல் அதிகரிக்கும்.
- வேப்பங்கொட்டை கரைசல் அல்லது வேப்பம் புண்ணாக்கு கரைசலை தெளித்தால் இலை உறிஞ்சும் பூச்சியின் தாக்குதலைக் கட்டுப்படுத்தலாம்.
- 500 கிராம் காய்ந்த வேப்பம்பழத் தூளை ஒரு மரத்திற்கு இட்டால் நூற்புழுதாக்குதல் கட்டுப்படும்.

**சாத்துக்குடி**

- தண்டுதுளைப்பான் தாக்கிய மரத்திலுள்ள ஓட்டைகளை கழுவி சுத்தம் செய்து, சுண்ணாம்பு கரைசலில் தோய்த்த பஞ்சை அதில் அடைத்துவிடலாம் அல்லது லெமன் கிராஸ் புல்லை ஓட்டையை சுற்றி இடவேண்டும்.

- சாம்பல் நோயைக் கட்டுப்படுத்த, பூக்கும் பருவத்தில் மரத்தைச் சுற்றி 2 அடி அகலத்திற்கு பச்சை சோற்றுகற்றாழை செடித் துண்டுகளை இடலாம்.
- எறும்புத் தொல்லையை தடுக்க, விதையுடன் சாம்பல் கலந்து வைக்கலாம்.

**தக்காளி**

- சோற்றுக் கற்றாழை, துளசி மற்றும் ஆடுதின்னபாளை செடிகளின் சாற்றை தயார் செய்து, தக்காளி செடிமீது தெளித்தால் எல்லாவிதமான பூச்சி மற்றும் நோய்களை கட்டுப்படுத்துவதோடு, பூ உதிர்தலையும் குறைக்கலாம்.
- 20மிலி காகித பூ இலைச் சாற்றில் ஒரு லிட்டர் நீர் கலந்து தக்காளிவிதைகளை 6 மணி நேரம் ஊறவைத்து விதைத்தால் நாற்றாங்காலில் நாற்று அழுகல் நோய் வராது.
- 25-30 நாட்கள் ஆன நாற்றுக்களை நடவுக்கு பயன்படுத்தவேண்டும்.
- பூ உதிர்தலைகுறைக்க, வேப்பம் எண்ணெயைதெளிக்கலாம்.
- பூ உதிர்தலை குறைக்க சூளைச் சாம்பல் தோட்டத்தைச சுற்றிநட்டால் நூற்புழு தாக்குதல் கட்டுப்படும்.
- செண்டுமல்லிசெடியை தக்காளிதோட்டத்தைச் சுற்றி நட்டால் நூற்புழுதாக்குதல் கட்டுப்படும்.
- காய் துளைப்பானை தடுக்க, பூண்டு அல்லது வெங்காயசெடியை வரப்பு பயிராக நடவுசெய்தல் வேண்டும்.
- பென்சோயின் கொண்டு பூக்கும்போது காலை, மாலை வேளைகளில் புகை மூட்டினால் காய் துளைப்பான் மற்றும் அசுவினி தாக்குதலைக் கட்டுப்படுத்தலாம்.
- வேப்பம் புண்ணாக்கு உடன் ஆட்டுப் புழுக்கையை கலந்துவயலில் இட்டால் இலைப்பேன் தாக்கம் கட்டுப்படும்.
- காலை வேளையில் சாம்பலைத் தக்காளிச் செடிக்குத் தூவினால் இலைப்பேன் மற்றும் அசுவினி தாக்குதல் கட்டுப்படும்.

- அனைத்துவித பூச்சிகளையும் கட்டுப்படுத்த 11/2 கிலோ சாம்பலை சாணியுடன் கலந்துதெளித்தல் வேண்டும்.
- சர்வோதயசோப் கரைசலை இலைகளின் மீது தெளித்தால், மாவுப் பூச்சியின் முட்டைமீது படிந்து இறந்துவிடும்.

**கத்தரி**

- கத்தரிப்பழ அழுகலைத் தடுக்க, 8 சோற்றுக் கற்றாழை இலையை நசுக்கி 1 லிட்டர் தண்ணீரில் தெளிக்கவேண்டும்.
- காய் துளைப்பானைகட்டுப்படுத்த,கனகாம்பரம் செடியை வரம்புசெடியாக பயிரிட வேண்டும்.
- கோழி எருவை கத்தரி வயலில் இட்டால், அதிக மகசூல் கிடைக்கும்.
- 40 கிலோ வேப்பங்கொட்டையை தூளாக்கி, நடவு செய்த 35 நாள் கழித்து இட்டால் நல்ல மகசூல் கிடைக்கும்.
- கத்தரிதோட்டத்தில் ஆமணக்கு செடியை வரப்புபயிராக நட்டால் அதுவே பூச்சிகளைக் கவரும் செடியாக இருந்து, பூச்சித் தாக்குதலை தடுக்கும்.
- கத்தரியுடன் வெங்காயத்தை ஊடுபயிராக போட்டால், அநேக பூச்சிகளை (காய் துளைப்பான் உட்பட) கட்டுப்படுத்தலாம்.
- இலைப்பேனை கட்டுப்படுத்த, வேப்பம் புண்ணாக்கு மற்றும் சோற்றுக் கற்றாழையை இரண்டையும் நன்கு இடித்துத் தூளாக்கி அதை 10 நாட்கள் தண்ணீரில் ஊறவைத்து, தெளித்தால் போதும்.
- சாம்பலையும், மஞ்சள் தூளையும் சம அளவில் கலந்து, அதை செடிகளின் மீது தூவினால் அசுவினி தொல்லைக் கட்டுப்படும்.
- சுண்ணாம்புத் தூளைத் தூவினால், மாவுப்பூச்சி தாக்குதல் தடுக்கலாம்.
- அனைத்துவித சாறு உறிஞ்சும் பூச்சிகளையும் கட்டுப்படுத்த, கோமியம், வேப்ப எண்ணெய் மற்றும் புகையிலை வடிநீர் கலந்து தெளிக்கவேண்டும்.
- வேப்பம் புண்ணாக்கு கரைசலை தெளித்தால், செஞ்சிலந்தி மற்றும் புள்ளிவண்டு தாக்குதலைக் கட்டுப்படுத்தலாம்.

**மிளகாய்**

- மிளகாய் விதையை சாண எரிவாயுகலன் கழிவில் ஒன்றரை மணி நேரம் ஊறவைத்துவிதைத்தல் விதை வீரியமாக முளைத்து நன்கு வளர்வதோடு நோய் எதிர்ப்புசக்தி உண்டாக்குகிறது.
- ஆட்டுக்கிடை அமர்த்தினால் அதிக மகசூல் கிடைக்கும்.
- கடலை புண்ணாக்கு இடுவதால், பூ உதிர்வது தடுக்கப்படுவதோடு மகசூல் அதிகரிக்கும்.
- அதிக பூக்கள் பெறவும், பூ உதிர்வதை குறைப்பதற்கு, பெருங்காயத்தை ஏக்கருக்கு 1 கிலோ வீதம் எடுத்து, துணியில் கட்டி வாய்க்காலில் வைக்கவேண்டும்.
- ஆமணக்குப் பயிரைவரப்பு பயிராக பயிர்ச் செய்தால் அது புகையிலை வெட்டுப்புழுவை கவரும்.
- 5 மிளகாய் வரிசைக்கு 2 வரிசை மக்காச்சோளம் அல்லது சோளம் நடவுசெய்தால் தேமல் நோயைக் கட்டுப்படுத்தலாம்.
- முள் செடி இலைச்சாற்றை இரண்டு மாதம் ஆன செடியில் தெளித்தால் இலைப்புள்ளி மற்றும் சாம்பல் நோய் அழுகலை கட்டுப்படுத்தலாம்.
- வேம்பு, அரளி, நொச்சி, துளசி மற்றும் எருக்களை இலைகளை இடித்து அதை வடிகட்டி அந்தச் சாற்றை தெளிப்பதால் இலைச்சுருள் நோய், வெள்ளைஈ தாக்குதல் கட்டுப்படுத்துவதோடு, நன்றாக செடிவளரும்.
- வில்வம் இலைச்சாற்றை தெளிப்பதால் அடி அழுகல் நோய் கட்டுப்படுத்தலாம்.

**முருங்கை**

- முருங்கைமரம் 4-5 அடி உயரம் இருக்கும் போது, அதன் உச்சிக் கொழுந்தை கிள்ளிவிட்டால் அதிக கிளைகள் உண்டாகும்.
- முருங்கை கம்பளிப்புழுவை கட்டுப்படுத்த மண்ணில் வேர் அருகில் விரல் வடிவ பெருங்காயத்தை வைத்தால் போதும்.
- இலைகழிவு மற்றும் இதர கழிவுகளை மரத்தின் அடிப்பாகத்தில் போட்டு எரித்தால், கம்பளிப்புழு தாக்குதல் கட்டுப்படும்.
- செடிமுருங்கையில் 3 தடவை மறுதாம்பு பயிர் விடலாம்.

**வெள்ளரி**

- 10 கிலோ கடலைப்பிண்ணாக்கை இரவு இரவு முழுவதும் ஊறவைத்து, மறுநாள் காலை செடிக்கு 200 மிலி வீதம் ஊற்றினால் அதிகமகசூல் கிடைக்கும்.
- அசுவினிமற்றும் சாம்பல் நோயைக் கட்டுப்படுத்த சாம்பலை தூவலாம்.
- நன்கு முற்றிய பழுத்த பழங்களில் விதைகளை எடுத்து அதை தண்ணீரில் கழுவி, சாம்பல் கலந்து காயவைத்து சேமித்தால், ஒருவருடம் வரைசேமிக்கலாம்.

**புடலை**

- விதைகளை சாணிப்பாலில் அரைமணி நேரம் ஊறவைத்து விதைத்தால், விதைகள் விரைவாக முளைப்பதோடு வறட்சி காலத்தைத் தாங்கி வளரும்.
- பூ உதிர்தலைத் தடுக்க 25 கிராம் பெருங்காயத்தை ஒரு லிட்டர் நீர் என்ற விகிதத்தில் கலந்து கட்டுப்படுத்தலாம்.
- புடலை அறுவடை முடிந்தவுடன், மீதமுள்ள இலைத்தழைகளை மண்ணில் மடக்கி உழுதால் அது உரமாக மாறும்.

**பீர்க்கை**

- பீர்க்கைகாய் மீதுள்ள வரிகளை வைத்து அவை இனிப்பாக அல்லது கசப்பாக இருக்கும் என கண்டுபிடிக்கலாம். இரட்டைப்படையில் இருந்தால் இனிக்கும் அவை ஒற்றைப் படையில் இருந்தால் கசக்கும்.

**பாகற்காய்**

- பாகல் விதையை விதைப்பதற்கு ஒரு நாள் முன்பு பாலில் ஊறவைத்து விதைத்தால் விதை வேகமாக முளைத்து நன்றாக வளரும்.

**காலிப்பிளவர்**

- வேப்பஎண்ணெயை நீரில் (30 மிலி / லிட்டர்) கலந்து, தெளித்தால் காலிப்பிளவரில் தோன்றும் 'டைமண்ட்' பூச்சியை (Diamond back meth) கட்டுப்படுத்தலாம்.

**பீன்ஸ்**

- நாட்டுகலப்பைக்குப் பின்னால் விதைவிதைப்பு, மானாவாரி பீன்ஸ் சாகுபடிக்குபின் செய்தல்.
- பயிர் வளர்ச்சியின்போது பூச்சித்தாக்குதல் வராமல் இருக்கவேண்டும் என்றால் விதையை தண்ணீரில் சிறிது நேரம் ஊறவைத்துப்பின் செம்மண் மற்றும் சாம்பல் கலவைகளில் கலந்து, வெயிலில் காயவைத்து விதைக்கப் பயன்படுத்துதல்.
- பூச்சித் தாக்கப்பட்ட பயிர்களின் புதிய அடுப்புச் சாம்பலைத் தெளித்தல்.

**பூசணி**

- பூசணிவிதைகளைக் காய்ந்த பூசணிகாயையே சேமிப்புகலமாக பயன்படுத்தலாம். ஆம், நன்கு பழுத்த காய்ந்த பழத்திலுள்ள விதைகளை எடுத்து, அதை சாம்பலுடன் கலந்து பின் அந்தக் காயிலேயே வைத்துப் பின் அதன் சிறுதுளைமங்கும் காற்றோட்டத்திற்கு விட்டு ஈரமான செம்மண் வைத்துபூசி, சேமிப்பு சுலபமாக உபயோகிக்கலாம்.

**சுரைக்காய்**

- நன்கு முறிந்த காய்ந்த காய்களை அப்படியே சூரிய ஒளியில் காயவைத்து பின் அப்படியே காய்ந்த பழத்தில் சேமிக்கலாம்.
- விதைகளை தண்ணீரில் ஊறவைத்து பின் துணியில் கட்டிவைத்தால் விதையின் முளைப்புத்திறன் அதிகரிக்கும்.
- பக்ககிளைகளை கிள்ளிவிடுவதால்,அதிக சம்பு/கிளைவிட்டு நல்ல தரமான காய் கிடைக்கும்.

**முட்டைக்கோசு**

- அடிக்கடி நாற்றாங்காலிலும், வயலிலும் நன்றாக கோசுக்கொடிவரும்.
- முட்டைக்கோசுநடவுச் செய்த வயலில, அடிக்கடி களைடயெடுப்பு செய்தால், முட்டைக்கோசு அறுவடைக்கு முன்பே வரும்.
- கிலோ சுண்ணாம்பை 2-3 லிட்டர் மோரில் கலந்து, ஒவ்வொரு வார இடைவெளியில் விளக்குமாறுக் கொண்டு தெளித்தல் முட்டைக்கோசு புழுவைக் கட்டுப்படுத்தலாம்.

**முள்ளங்கி**

- உருளைக்கிழங்கு சாகுபடி செய்தபின் முள்ளங்கி நடவு செய்தால் செலவுகுறையும்.
- மானாவாரிப் பயிராக முள்ளங்கியை நடவுச் செய்தால், நிலத்தில் இருக்கும் ஈரத்தையே நன்கு எடுத்து பயிர் நன்கு வளரும்.
- உருளைக்கிழங்கு சாகுபடிக்கு பின் முள்ளங்கி நடவுசெய்தால் எந்த உரமும் போடத் தேவையில்லை. நிலத்தில் உருளைக்கிழங்கு போட்ட உரமும் இதற்கு இருந்து உதவும்.
- முள்ளங்கி அறுவடை செய்த பின் தண்ணீர் கழுவினால், நல்ல விலை கிடைக்கும்.

**பீட்ரூட்**

- பீட்ரூட் கேரட் பயிருடன் ஊடுபயிராக செய்தால், சிறிதளவு பயிர் கவனிப்பே போதும், ஏனெனில் கேரட் செய்யும் கவனிப்பே இதற்குபோதும்.
- விதை உபயோகத்தில் நல்ல பெரிய காய்களைத் தேர்வு செய்யவேண்டும்.
- நல்லதரமான பீட்ரூட்டைப் பெறசெய்யவேண்டும்.

**கேரட்**

- கேரட் பயிரைஉருளைக்கிழங்கு கொண்டைக்கடலை பயிர் மாற்றிபயிர் செய்தால் நல்ல வருமானம் கிடைக்கும் ஏனெனில் ஒரேபயிர் சாகுபடி செய்தால் விளைச்சல் குறையும்.
- அருகிலுள்ள காடுகளை கிடைக்கும் சிகைமரத்தின் மெலிந்த கிளைகளை பாதுகாப்பு அரணாக அமைந்தால், மண்ணரிப்பு தடுக்கலாம்.
- மண்ணரிப்பைக் கட்டுப்படுத்த கல்சுவர், சரிவுக்கு குறுக்காக அமைக்க வேண்டும்.
- நன்குகொத்தி, கட்டிகளை உடைத்தால் மேலேமண் கீழும், கீழ் மண் மேலும் வரும் வயலின் சேரட் நடவுக்கு பின்பு
- சாம்பலையை கோமியத்துடன் கலந்து தெளிந்தால், இலைத் தத்துப்பூச்சியை கொல்லலாம்.

- சில நேரம் செடியைபிடுங்கி, அது நன்கு முற்றி ஆரஞ்சு நிறத்தில் இருந்தால் அறுவடையை ஆரம்பிக்கலாம்.

**மல்லிகை**

- நாட்டுமல்லி என்று அழைக்கப்படும் நாட்டு இரகம், பூ சிறியதாகவும், அதிக வாசனை உள்ளதாகவும் சிறிய காம்புள்ள மல்லிகைப்பூ வாசனைப் பொருட்கள் தயாரிக்கபயன்படுகிறது.
- ஒவ்வொரு வருடமும், தொழுஉரம் அல்லது ஆட்டை கிடைபோடுவதால் மண்ணின் வளத்தை சேமிக்கலாம்.
- அனைத்துவிதமான பூச்சிகளை கட்டுப்படுத்த, மல்லிகைக்கு, 1 கிலோ அரளி பழத்தை ஒருநாள் நீரில் ஊறவிட்டு பின் அதை கசக்கி, சாறு எடுத்து அதை தண்ணீருடன் 1க்கு 10 என்ற விகிதத்தில் கலந்து தெளிக்கலாம்.
- 5 கிலோ ‘ஒடுவன்தலை’ இலை, கிளைகளை 2 லிட்டர் நீரில் கொதித்து வைத்து, அது ஒரு லிட்டராக குறையும் வரை கொதிக்கவைத்து அதில் 50 மிலிக்கு 15 லிட்டர் நீர் கலந்து கைத்தெளிப்பான் கொண்டு மல்லிகைத் தோட்டத்திற்கு அடித்தால் அனைத்துவிதமான பூச்சி மற்றும் நோய்களை கட்டுப்படுத்தும்.
- நூற்புழு தாக்கத்தை கட்டுப்படுத்த 150 கிராம் வேப்பம்புண்ணாக்கு பவுடர் ஒவ்வொரு செடிக்கு இடவேண்டும்.
- நவம்பர் - டிசம்பர் மாதங்களில் மல்லிகை செடியை கவாத்து செய்யும்போது ஆட்டுக்கிடை அமர்த்தினால், ஆடுகள் பழைய இலைகளை உண்டுவிடும். இதனால் புதிய தளிர்கள் உருவாக வாய்ப்புக்கள் உண்டாக்கும்.

**ரோஜா**

- பூ மொட்டு உதிர்வதைத் தடுக்க, முட்டைஓட்டை தூளாக்கி, செடிக்கு 100 கிராம் வீதம் இடவேண்டும்.
- முட்டை ஓடு, கறிக்கடை கழிவுநீர், வெங்காயத்தோல் முதலியவற்றை ரோஜா செடிக்கு இட்டால் பூப் பூப்பதை விரைவுப்படுத்துவதோடு அதிக பூ மகசூலும் கிடைக்கும்.
- அதிகநாட்கள் பூக்காத ரோஜா செடியைக்கூட, 15 நாட்கள் நொதிக்கவைத்த சாணிக் கரைசலை தெளிப்பதால் 10 நாட்களிலே பூக்க ஆரம்பிக்கும்.

- செதில் பூச்சிலைக் கட்டுப்படுத்த,சாணிப்பாலில் தோய்த்த பழையதுணியை செதில் பூச்சி உள்ள இடங்களில் தேய்ப்பதாலும், காய்ந்த அதிகம் பாதித்த கிளைகளை அகற்றுவதாலும் பூச்சிகள் கட்டுப்படும்.
- பூக்களின் பூ இதழ் உதிர்வதைத் தடுக்க, பூவின் நடுவில் ஒருசொட்டுத் தேங்காய் எண்ணெய் வைப்பதால் ஒருநாள் வரை பூ உதிராமல் இருக்கும்.

**கனகாம்பரம்**

- கனகாம்பரத்தில் நூற்புழுவின் தாக்கத்தை கட்டுப்படுத்த, காய்ந்த சிவப்பு அரளிப்பூவை வேப்பம் புண்ணாக்குடன் கலந்து கடைசி உழவிற்கு முன்பு இடவேண்டும்.
- வேப்பம் புண்ணாக்கு இடுவதால் நூற்புழுதாக்கம் கட்டுப்படும்.

**செண்டுமல்லி**

- சித்திரைபட்டத்தில் செண்டுமல்லி சாகுபடி செய்தால் குறைந்த அடர் வளர்ச்சி கிடைப்பதால், அது சிறிய பூக்களே உருவாக்கும். ஆனாலும் அதிகம கசூல் கிடைப்பதோடு அதிக லாபமும் கிடைக்கும்.
- கடலைப் புண்ணாக்கை தூளாக்கி இட்டால் அதிக மகசூல் கிடைப்பதோடு பெரிய பூ கிடைக்கும்.
- நட்ட 2 மாதத்திற்கு பின்பு, நுனியைக் கிள்ளிவிடுவதால் அதிககிளை தோன்றும்.
- பறித்த அன்று சந்தைக்கு கொண்டுசெல்ல முடியாவிட்டால், பூக்களை கோணிபையின் மேல்பரப்பிஅதன் மீதுநீர் தெளித்து வெள்ளைதுணியை போர்த்திவைத்தால், வாடாமல் இருக்கும்.
- அதிக பூ மகசூல்பெற தொழுஉரத்தை ஜனவரி மற்றும் ஆகஸ்ட் மாதத்தில் இடவேண்டும்.
- 5-6 மாதங்கள் ஆன செவ்வரளிசெடியை 1-2 அடி உயரம் விட்டுகவாத்து செய்யவேண்டும். அதனால் 5-6 வருடங்கள் வரை புதிய கிளைகளும் தோன்றி நல்ல மகசூல் கிடைக்கும். கவாத்து 4 வருட இடைவெளியில் இருமுறை செய்யலாம். அதன் செடியைப் பிடுங்கிவிட்டு, வேறுசெடி நடவுச் செய்தல் நல்லது.

**தென்னை**

- எலிமரத்தில் ஏறுவதைத் தடுக்க,பெரிய பனை ஓலையை நடுப்பாகத்தில் இரண்டாகப் பிளந்து, ஒரு பாகத்தை, மேல்மரத்தின் குலைக்கு அடியில் மரத்தை சுற்றிகட்டிவிடவேண்டும். இன்னொரு பாகத்தை முதலில் கட்டிய பகுதிக்கு எதிராக கட்டிவிடலாம்.
- தென்னையில் பூ உதிர்தலை கட்டுப்படுத்த உப்பை பூ பகுதியிலும் வேர்ப்பகுதியிலும் இட்டு அதிகநீர் பாய்ச்சவேண்டும்.
- 5-6 இலைவிட்ட 6-8 மாதங்களான தென்னை நாற்றை நடவுக்கு பயன்படுத்த வேண்டும்.
- தென்னை நடவுகுழியில் கொழிஞ்சியை இட்டு, ஆறு மாதம் மட்கவைத்த பின் நடவு செய்யவேண்டும்.
- தென்னை நடவுச்செய்வதற்கு முன்பு, வேரையெல்லாம் வெட்டிசெய்தால், புதிய வேர் விரைவாக விட ஏதுவாகும்.
- அரைவட்டக் குழி எடுத்துமரத்தைச் சுற்றி, எருக்களை 1 கிலோ, கொழிஞ்சி 1 கிலோ, 1 கிலோ பூதகள்ளி, 1 கிலோ மீன்கழிவு, 1 கிலோ, உப்பு 1 கிலோ இடுவதால் அதிக மகசூல் கிடைக்கும்.
- தேங்காய் மட்டையை, மரத்தைச் சுற்றில் மண்போர்வையாக இடுவதால் முண் ஈரப்பதம் காக்கப்படுவதோடு, களையை கட்டுப்படுத்தலாம்.
- தென்னை தோட்டத்தில் தென்னைக்குஊடே உள்ள பகுதியை ஜீன் - ஜீலை மற்றும் டிசம்பர் - ஜனவரி மாதத்தில் உழவு செய்தால் வேர் பகுதியில் நல்ல காற்றோட்டம் கிடைப்பதோடு, களையைக் கட்டுப்படுத்தலாம்.
- வேப்பஎண்ணெய் தெளிப்பதால் பூ உதிர்தலை குறைக்கலாம்.
- குரும்பை உதிர்வதை தடுக்க சாதாரண உப்பை வளர் நுனிப்பகுதியில் மரத்திற்கு 2 கிலோ வீதம் மழைக்காலத்தில் இடவேண்டும்.
- குரும்பை உதிர்வதை தடுக்க சாம்பலை இடவேண்டும்.
- குரும்பை உதிர்வதைக் கட்டுப்படுத்த, பூப்பதற்கு முன்பு மரத்தைச் சுற்றி வட்டவடிவில் பாத்தி எடுத்து அதில் கொழிஞ்சி மற்றும் எருக்களையை இடலாம்.

- பூச்சி மற்றும் எறும்பு தொல்லையை தடுக்க, நடவுக்கு முன்பு வேப்பம் புண்ணாக்கைக் குழிகளில் இடவேண்டும்.
- தண்ணீர் மற்றும் ஆமணக்குபுண்ணாக்கு கலந்த மண்பாண்டங்களை அங்காங்கு தென்னை தோப்பிற்குள் சிறிய குழிகளில் வைத்திருந்தால் மூன்று நாட்களுக்குப் பின்பு, அதிலிருந்து கிளம்பும் வாடையினால் காண்டாமிருக வண்டு கவரப்பட்டு பானையில் விழுந்து இறந்துவிடும்.
- வேப்பம் புண்ணாக்குச் சாற்றைவளர் நுனியிலும், அதற்கடுத்த ஓலையிலும் கொட்டுவதால் காண்டமிருகவண்டின் தாக்கதலைத் தடுக்கலாம்
- தண்டு கூண் வண்டின் சேதாரத்தைக் கட்டுப்படுத்த துளை ஏற்பட்ட பகுதியில் சுத்தம் செய்து சாதாரண உப்பை நிரப்பி பின்பு மூடிவிட வேண்டும்.
- தென்னைநாற்று நடும்போது 1-2 கிலோ உப்பை குழிகளில் கொட்டினால், கரையானைக் கட்டுப்படுத்துவதோடு ஈரப்பதத்தைக் காக்கலாம்.
- தென்னை நடவு செய்யும்போது ஒரு'அகேல்' இலைக் குழிகளில் நட்டால் ஈரப்பதம் காக்கப்படுவதோடு கரையான் தாக்குதலையும் தடுக்கலாம். தென்னைந்தோப்பில், நீரை அதிகம் தேக்கினால் கரையான் எல்லாம் நீரோடு அழிந்துவிடும்.
- தென்னைமரத்தின் அடிப்பாகத்திலிருந்து 2-3 அடி வரை சுண்ணாம்பு பூசினால் கரையான் தாக்குதல் கட்டுப்படும்.
- கரையான் தாக்குதலை கட்டுப்படுத்த, 500 கிராம் சாதாரண உப்பை 5 லி தண்ணீரில் கலந்து தண்டின் ஊற்றினால் போதும்.
- கோழிகளை தென்னந்தோப்பில் வளர்ப்பதால், அவை கரையானை தின்றுவிடும்.
- தஞ்சாவூர் வாடல் நோயைக் கட்டுப்படுத்த, பசுந்தாள் உரச்செடியாக கொழிஞ்சி அல்லது தக்கைப்பூண்டு செடியை வளர்த்து, மடக்கி உழலாம் அல்லது வேப்பம் புண்ணாக்கை நன்கு மட்கிய தொழுஉரம் இட்டபின் இட்டுவிடலாம்.
- தென்னைதண்டு செவ்வொழுகல் (stem bleeding)யைக் கட்டுப்படுத்த ஒழுகல் பகுதியில் வாயை சுரண்டி சுத்தம் செய்து அதன்பின் சுண்ணாம்பு கரைசலை ஊற்றவேண்டும்.

- மரத்தின்மீது எலி மற்றும் அணில் ஏறுவதைத் தடுக்கமரத்தின் அடியிலிருந்து 2-3 அடி உயரத்தில் சீமைக் கருவேல் கிளையையோ முள் கம்பி வேலி சுற்றிகட்டினால் போதும்.
- சிறிது நாட்டுச்சக்கரையை தேங்காய் எண்ணெயில் இட்டால் தூசுக்கள் எல்லாம் தனியாகப் பிரிந்து, எண்ணெய் தெளிவாக இருக்கும்.

**இஞ்சி**

- வரப்பு ஓரங்களில் உள்ள இஞ்சி கிழங்குகளை விதைக்கப் பயன்படுத்தல்.
- விதைப்புக்கு முன்பு சுண்ணாம்பு தூளைப் போட்டால், பூச்சிதாக்காது.
- பச்சை அல்லது காய்ந்தபசும் இலைகளை, இஞ்சி நடவுசெய்ய வயலில் போட்டால், களை தொந்தரவு இல்லாதது மட்டுமல்லாமல் நிழலாக இருக்கும்.

**பாக்கு**

- பெரிய விதைகளை 2:1 என்ற விகிதத்தில் மணல் மற்றும் மண் கலந்தசோக்கு ள பையில் வைத்து 2-3 வாரத்திற்குெ தளித்துவந்தால் 30 நாட்களில் முளைக்கும்.
- அருகில் கிடைக்கும் மரக்கிளைகளையே,நிழல் வலையாக அமைத்தால் இளஞ்செடிகளை அதிகமழை, சூரியஒளி மற்றும் பணியிலிருந்து காக்கலாம்.

**காப்பி**

- அரைகிலோ சாணத்தை 15 லிட்டர் தண்ணீரில் கலந்து, நாற்றாங்கால் மீது தெளித்தால் நல்லவளர்ச்சி ஏற்படும்.
- காப்பியை வாழை - காப்பி, பலா - சாத்துக்குடி, காப்பி, சாத்துக்குடி - காப்பி - மிளகு என்றதொரு அடுக்கு முறையில் பயிர் செய்யலாம்.
- ஒவ்வொரு காப்பிச் செடியைச் சுற்றிலும் அரைவட்ட வடிவ குழி எடுத்தால், ஈரப்பதத்தை காக்கலாம்.
- ஏப்ரல் - மே மாதங்களில், காப்பித் தண்டின்மீது தென்னைநார்க் கயிறுக் கொண்டு தேய்ப்பதால் தண்டுதுளைப்பான் தாக்குதலைத் தடுக்கலாம்.

- காப்பிக் கொட்டையை துளைப்பான் ஒரு காப்பித் தோட்டத்திலிருந்து இன்னொன்றிற்கு கோணிசாக்கு மூலமே பரவுகிறது. எனவே, கோணிசாக்கை வேப்பங்கொட்டை கரைசலில் மூழ்க வைத்து, நனைத்து நன்கு காயவைத்து பயன்படுத்த வேண்டும்.
- வாடல் நோயை கட்டுப்படுத்த சுண்ணாம்புத்தூளை இடவேண்டும்.
- நூற்புழு தாக்கதலுக்கு எதிர்ப்புள்ள இரகம் 'ரோபஸ்டா' இரகம்.
- நோய் தாக்காத நல்ல வளர்ச்சி உள்ளகாப்பிச் செடியிலிருந்து விதையைச் சேகரித்து, விதைக்க பயன்படுத்தலாம்.
- நல்ல தரமான காப்பிக் கொட்டை, 3வது அல்லது 4வது அறுவடையின்போது கிடைப்பதே.
- ஏக்கருக்கு 3 கிலோ புண்ணாக்கு, 6 கிலோ நாட்டுசெண்டு மல்லியை தனித்தனியாக தண்ணீரில் 3 நாள் ஊறவைத்துப் பின், அதை கலந்து 200 லிட்டர் நீர் சேர்த்து, 15 நாள் இடைவெளியில் 2 முறை அடித்தால் காப்பிகொட்டைத் துளைப்பானைக் கட்டுப்படுத்தலாம்.

**தேயிலை**

- தேயிலை தோட்டத்தில் ஏதம் புல் வகையை வரப்புகளில் நட்டால் மண்ணரிப்பைத் தடுக்கலாம்.
- மிக உயரமான பகுதியில் தேயிலைநட்டால் நல்ல தரமான தேயிலையைப் பெறலாம்.
- மிக உயரமான பகுதியில் தேயிலை நட்டால், குறைந்த மகசூல் தரும்.
- தேயிலையுடன் 'காவேரி' இரக காப்பியை ஊடுப்பயிராக நட்டால் நன்றாக வளரும்.
- தேயிலை விதைகளை ஒரு அடுக்கு மணல் படுக்கையில் நட்டுப்பின் அதன் பின் ஒரு அடுக்கு மணல் போட்டு, நீர் விட்டால் தெளித்தால் 3 வாரத்தில் நல்ல முளைப்பைப் பெறலாம்.

**வேளாண் காடுகள்**

- தூத்துக்குடி மாவட்டத்தின் தென் பகுதியின் வறட்சியைத் தாக்கி, வளரக்கூடிய பழைய மரங்களான, பனை, ஓடைமுள், புளி மற்றும் வேம்பு ஏற்றது.

- கருமண் பகுதியில் 25 அடி இடைவெளியில் நடப்படும் புளிமரத்திற்கு இடையில் 2 வரிசைசவுக்கு நட்டு, புளி விளைச்சலுக்கு வரும் முன்பே சவுக்கை வெட்டி இலாபம் பெறலாம்.
- 'சீமைக்கருவேல்'மரவிதை விரைவாக முளைக்காது, ஆனால் ஆடு தின்று அதன் புழுக்கையிலிருந்து வரும் விதை விரைவாக முளைக்கும். எனவே அப்படிப்பட்ட விதையை முளைக்க, விதைக்க பயன்படுத்தலாம்.
- மலைவேம்பு விதை துரிதமாக முளைக்க, அதை நீர்விட்ட பசுமாட்டுச் சாணத்தில் கலந்து ஒரு வாரம் வைத்திருந்து பயன்படுத்தவேண்டும்.
- தேக்குவிதையை இரவு முழுவதும் ஊறவைத்து பின் 12 மணி நேரம் நிழலில் உலர்த்த வேண்டும். இதுபோல் 7 நாட்கள் செய்த பின் கடைசியாக சாணக்கரைசலில் ஒரு நாள் ஊறவைத்து விதைக்கப் பயன்படுத்தினால், விரைவாக முளைக்கும்.
- குச்சி நடவு செய்யும்போது, வேர்ப்பகுதியில் கரையான் சேதாரம் ஏற்படாமல் தவிர்க்க, ராகியை நடவுக் குச்சியை சுற்றி இடவேண்டும்.
- மரத்தில் கரையான் பாதிப்புஏற்படாமல் இருக்க, மரத்தின் அடியில் சோற்றுகற்றாழை நடவேண்டும்.
- இளம் மரங்களை ஆடுகள் மேயாமலிருக்க, சாணிக் கரைசலை இலைத்தழைகளின் மீதுதெளிக்கவேண்டும்.
- நடவு செய்யப்பட்ட வேப்பங்கன்றை ஆடுகள் கடிக்காமல் இருக்க வைக்கோல் கயிறுகொண்டு சுற்றி பின் சீமைக் கருவேல் வேலிபோல் சுற்றி அதன்மீது சாணிக் கரைசலை தெளித்தால் போதும்.
- 15 ஆண்டுகளான வேப்பமரந்தோப்பிலுள்ள மரத்திலிருந்து ஒரு ஏக்கருக்கு 1 இலட்சம் இலாபம் வரை வருமானம் ஈட்டலாம்.

தகவல் : TNAU Agri tech portal 2024



**ICAR Krishi Vigyan Kendra, CENDECT. Theni**

ICAR-Agricultural Technology Application Research Institute (ATARI)
Zone-X/क्षेत्र 10, क्रीडा परिसर/CRIDA Campus, संतोषनगर/Santoshnagar, हैदराबाद/Hyderabad - 500059
**An ISO 9001:2015 Certified Institute**